விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 16 சனிக்கிழமை (30.05.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 162





# இறுதி மூன்று வார காலப்பகுதியில் வன்னியில் 20 ஆயிரம் பேர் பலி

## பிரிட்டிஷ் ரைம்ஸ் தகவல் வெளியீடு

(லண்டன்)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவம் மேற்கொண்டிருந்த தாக்குதல் நடவடிக்கையின் இறுதி மூன்று வார காலப் பகுதியில் யுத்தப் பகுதியில் சிக்குண்டிருந்த பொது மக்கள் இருபதாயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருப்பதாக பிரிட்டிஷ் முன்னணி நாளேடான ரைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)



பிரிட்டிஷ் ரைம்ஸ் வெளியிட்ட படங்கள்.

# வவுனியா நலன்புரி முகாம்களுக்கு ஐ.நா. பணியாளர்கள் செல்ல அனுமதி

## நீல் பூனே தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியா முகாம்களிற்கு ஐ.நா. பணியாளர்கள் சென்று பணியாற்றுவதற்கான அரசின் அனுமதி வழங்கும் நடவடிக்கையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாக ஐ.நா.பணிகளிற்கான இலங்கை ஒருங்கிணைப்பு அதிகாரி நீல் பூனே தெரிவித்துள்ளார்.கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் இலங்கையின் மனிதாபிமான நிலைவரம் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.அவர் மேலும் கூறியதாவது, நாங்கள் நிறைய முன்னேற்றம் கண்டு வருகிறோம். நான்காவது வட்டகை என்று கூறப்படும் அதிகமான மக்கள் வாழும் பகுதிகளிற்கு நாங்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

# தயா மாஸ்டர் நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராகச் செயற்பட்ட தயா மாஸ்டர் எனப்படும் வேலாயுதம் தயாநிதி நேற்று கொழும்பு நீதிமன்றத்தில் குற்றப்புலனாய்வுத் துறையினரால் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்ற நீதிபதி நிசாந்த ஹப்புவாராச்சி முன்னிலையில் தயா மாஸ்டர் (12ஆம் பக்கம் பார்க்க)

# இடம்பெயர்ந்த மக்களை ஒன்று சேர்க்க அரசின் ஆக்கபூர்வ நடவடிக்கை தேவை

## அமெ.காங்கிரஸ் உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் வெற்றி பெற்றமைக்கு வாழ்த்து தெரிவிக்கின்றேன்.அத்துடன் மிக குறுகிய காலத்தில் இடம்பெயர்ந்தோரை நலன்புரி முகாம்களிற்குள் ஒன்று சேர்க்க அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் பல எடுத்துள்ளதாக அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஹெத் சூலர் தெரிவித்துள்ளார். கடந்த 26ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் (12ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த வாரம் டில்லி பயணம்

## ஹிலாரியையும் சந்திப்பார்!

(புதுடில்லி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த வாரம் புதுடில்லிக்குச் செல்கிறார். இது தொடர்பாக இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா செய்தி வெளியிட்டுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.குடாநாட்டுக்கு 24 மணிநேர மின்சாரம்!

யாழ்.மாவட்டம் முழுவதும் 24 மணி நேர மின்சாரம் பரீட்சார்த்தமாக வழங்கப்படுவதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

நொதேன் பவர் நிறுவனம் வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பிரதேசங்களுக்கான மின்சாரத்தை வழங்குவதால் மின்வெட்டு இடம்பெறுவதில்லை எனவும் தற்போது பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படும் 24மணி நேர மின்சார விநியோகத்தை நிரந்தரமாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# ★ இந்திய அரசாங்கத்துக்காகவுமே ★ இராணுவம் புலிகளுடன் போரிட்டது



## ஜனாதிபதி பேட்டி

(புதுடில்லி)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக நாங்கள் நடத்திய போர் எங்களுக்காக மட்டும் அல்ல; இந்தியாவுக்காகவும் தான் என தி வீக் என்ற ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இனப்பிரச்சினைக்கு இலங்கை நிலைமைக்கு ஏற்ப அரசியல் தீர்வு காணப்படும். இந்திய-இலங்கை ஒப்பந்தம் காரணமாகத் தான் இலங்கை அரசியல் சட்டத்திற்கு 13-வது திருத்தம் (12ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு மாகாண பிரதம செயலாளராக யாழ்.மேலதிக அரச அதிபர் நியமனம்



(கொழும்பு)

வடக்கு மாகாண பிரதம செயலாளராக, யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி,ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜாவின் பதவிக்காலம் நாளை 31ஆம் திகதியுடன் நிறைவு பெறுவதனையடுத்தே ஜனாதிபதி இப்புதிய நியமனத்தை வழங்கியுள்ளார்.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபராக ஆ.சிவசுவாமி கடந்த 6 வருடங்களாக கடமையாற்றி வந்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

# பிரிட்டிஷ் ரைம்ஸின் தகவல்கள் உண்மைத்தன்மையற்றவை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

மோதல் பகுதியில் பொதுமக்களின் உயிரிழப்புத் தொடர்பாக பிரிட்டிஷ் ரைம்ஸ் நாளிதழ் வெளியிட்ட தகவல்கள் உண்மைத்தன்மையற்ற குற்றச்சாட்டுகள் என இலங்கை அரசு மறுத்துள்ளது.

இது தொடர்பாக பி.பி.சிக்கு தெரிவித்த இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலர் பாலித ஹோகன்ன மேலும் கூறியதாவது,

ரைம்ஸ் நாளிதழ் மிகவும் ஆத்திரமூட்டத்தக்க வகையில் இது போன்ற எண்ணிக்கையை எங்கிருந்து பெற்றது என்பது புரியவில்லை. இந்த எண்ணிக்கை வெறும் குப்பை. அதில் உண்மையை நிரூபிக்க முடியாது.

ஐ.நா. ஆவணம் (12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பரிசில் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியின் பரிசில் வழங்கல் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் கலந்து கொள்ளவுள்ளார். (ச)

# இடைத்தங்கல் முகாமிலுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உடனடி நடவடிக்கை

## தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் கல்வி அமைச்சர் உறுதி

(கொழும்பு)

இடைத்தங்கல் முகாமிலுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சி தொடர்பாகவும் அதிபர், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோரின் எதிர்கால நலன்கள் தொடர்பாகவும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக் குழுவொன்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதாகச் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலின் போது அரச தகவல்களின்படி ஏறக்குறைய 62 ஆயிரம் மாணவர்களும், ஆயிரத்து 876 ஆசிரியர்களும் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர் எனத் தெரிவித்த கல்வி அமைச்சர் இவ்விடைத்தங்கல் முகாம்களுக்கு அருகில் பாடசாலைகள் அமைக்கப்பட்டு இவர்களின் கல்வியைத் தொடர நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். இப் பாடசாலைகளுக்கு அருகில் இவ்வாசிரியர்களுக்கும் விடுதி வசதிகள் செய்து கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை முதற்கட்டமாக ஜூன் மாதம் 5ஆம் திகதி மாணவர்களுக்கு தைத்த சீருடைகள் வழங்கப்படும். அத்தோடு 500 ஆசிரியர்களுக்குரிய மேசைகளும் கதிரைகளும், ஆரம்ப பிரிவு மாணவர்களுக்காக 5 ஆயிரம் மேசைகளும், கதிரைகளும், இடைநிலை மாணவர்களுக்காக 40 ஆயிரம் மேசைகளும் கதிரைகளும் வழங்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மாணவர்களுக்கான பாடநூல்கள் விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். விஞ்ஞான பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆய்வு கூட உபகரணங்கள் இரசாயனப் பதார்த்தங்கள் என்பன 4 நடமாடும் ஆய்வு கூடங்களை முதற்கட்டமாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் காலக் கிரமத்தில் நிலைமைகள் சீரடையும் போது எஞ்சியவையும் அனுப்பி வைக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் வடக்கு, கிழக்கில் 30 பாடசாலைகளைத் தெரிந்து எடுத்து துரித அபிவிருத்தி மூலம் முன்னணிப் பாடசாலைகளாகத் திகழ தான் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் தெரிவித்ததாக சங்கத் தூதுக் குழுவிற்கு தலைமை வகித்த சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். சங்கத் தூதுக்குழுவில் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் தி.கணேசராசா அவர்களும் துணைத் தலைவர் திருமதி ஈ.ஜெ.மகேந்திராவும் பங்கு பற்றியிருந்தனர்.

சங்கம் விடுத்த ஏனைய கோரிக்கைகள் தொடர்பாக சங்கத் தூதுக் குழுவோடு ஜூன் மாதம் 2 ஆம் திகதி அமைச்சில் ஏனைய அமைச்சு அதிகாரிகளுடனும் கலந்துரையாடி முடிபுகளை எட்டலாம் என அமைச்சர் சங்கத் தூதுக் குழுவிற்கு உறுதியளித்ததாகவும் பொதுச் செயலாளர் தெரிவித்தார். (ச)

## விளையாட்டு விழா

(வட்டுக்கோட்டை)

வலி. மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் நடத்தும் வலி. மேற்கு பிரதேச வட்டுக்கோட்டை குடும்ப விளையாட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அம்பாள் முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை குடும்ப செயலாளர் செல்வி செ.நுனிஸ்டாங்கனி தலைமையில் நடைபெறும் இவ் விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பி.உ.ஆ. அலுவலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ச-4)

# 'இடர்படும் மக்களின் துயர் துடைப்போம்' திட்டத்தின் கீழ் பொருட்கள் கையளிப்பு

## அமைச்சர் டக்ளஸ் ஆரம்பித்து வைத்தார்

(வவுனியா)

'இடர்படும் மக்கள் துயர் துடைப்போம்' உதவித் திட்டத்திற்கமைய கொழும்பு வர்த்தகர்கள், பொது அமைப்புக்கள், மத மற்றும் சமூக அமைப்புக்கள் மற்றும் தனி நபர்களது பங்களிப்புடன் வன்னி மக்கள் மேம்பாட்டு நிதியத்தின் மூலமும் மகேஸ்வரி நிதியத்தின் மூலமும் சேகரிக்கப்பட்ட சுமார் 5 கோடி ரூபா மதிப்புள்ள பொருட்களை கையளிக்கும் நிகழ்வு வன்னியிலிருந்து இடம் பெயர்ந்த நிலையில் வவுனியா செட்டிகுளம் இராமநாதன் நலன்புரி கிராமத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு நேற்றுக் கையளித்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்றுக் காலை செட்டிகுளம் இராமநாதன் நலன்புரிக்கிராமத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்படி நிவாரணக் கிராமத்தின் நிர்வாகத்தரப்பினரை சந்தித்து அங்குள்ள மக்களது தற்போதைய நிலைமைகள் குறித்து விசாரித்து அறிந்து கொண்டார்.

அதன் பின்னர் அம் மக்கள் தங்க வைக்கப்பட்டிருக்கும் குடியிருப்புகளுக்கு சென்ற அமைச்சர் அங்கு திரண்டிருந்த மக்கள் மத்தியில் அவர்களது தற்போதைய நிலைமைகள் குறித்தும், குறைபாடுகள் மற்றும் தேவைகள் குறித்தும் கலந்துரையாடியதுடன், அம்மக்களின் சுகாதார நலன் சார்ந்த ஆலோசனைகளை முன் வைத்ததோடு அம் மக்களின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கும் ஏனைய தேவைகளை வழங்குவதற்கும் தான் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரிவித்தார்.

அமைச்சினால் வழங்கப்பட்ட பொருட்களில் பால்மா, குழந்தைகளுக்கான பால்மா, பனடோல், குழந்தைகளுக்கான பனடோல் சிரப், பெண்களுக்கான சுகாதாரப் பொருட்கள், பெண்களுக்கான உடைகள், சிறுவர்களுக்கான உடைகள், ஆண்களுக்கான உடைகள், பாதணி வகைகள், போர்வைகள், துவாய்கள், உடனடி மருந்து வகைகள், சுகாதாரப் பொருட்கள் உட்பட அத்தியாவசியப் பொருட்கள் பலவும் அடங்கியிருந்தன. (ச)

## விரிவுரை வகுப்புக்கள் இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜாவின் மரணத்தை இட்டு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் உயர் பட்டபடிப்புகள் பீடத்தின் அனைத்து விரிவுரை வகுப்புக்களும் இன்றும் நாளையும் நடைபெறமாட்டாது என யாழ். பல்கலைக்கழக உயர் பட்டபின் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் அறிவித் துள்ளார். (ச)

# கலைப் பீடாதிபதியின் மறைவு பல்கலைக்கழக சமூகத்துக்கு பேரிழப்பு

## முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை இரங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜாவின் மறைவு பல்கலைக்கழக சமூகத்திற்கும் கல்விச் சமூகத்திற்கும் பெருமிழப்பாகும் என முன்னாள் துணைவேந்தரும் யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலைய பணிப்பாளருமான வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

1970இல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மெய்யியல் விரிவுரையாளராக பணியை ஆரம்பித்த கிருஷ்ணராஜா 1975இல் யாழ். பல்கலைக்கழகத்தில் இணைந்து படிப்படியாக துறைத் தலைவர், பேராசிரியர் போன்ற உயர் பதவிகளைப் பெற்று 2007 இல் கலைப்பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

கலைப்பீட கற்கைநெறி விருத்திக்கும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் விரிவுரையாளர்களின் ஆற்றல் மேம்பாட்டிற்கும் பௌதிக வளவிருத்திக்கும் பெரும் பணியாற்றினார்.

குறுகிய காலமே பீடாதிபதியாக பணிபுரிய முடிந்த போதும் நிறைவான பங்களிப்பைச் செய்துள்ளார்.

கொழும்பு ,பேராதனை வளாகங்களில் 1966-70 காலத்தில் எனது மதிப்புக்கும், அன்புக்குமுரிய மாணவனாகவும் பின் சக விரிவுரையாளனாயும் விளங்கிய பேராசிரியர் கிருஷ்ணராஜாவின் மறைவு மிகவும் துயரமிக்கது என பேராசிரியர் வெளியிட்ட இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# யாழ்ப்பாண பல்கலைக்கழக இருபது-20 கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையும் துடுப்பாட்ட அணியும் இணைந்து நடத்தும் இருபது-20 துடுப்பாட்ட சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இச் சுற்றுப் போட்டியில் யாழ். பல்கலைக் கழக அணி, உடற்கல்வி அணி, யாழ். பல்கலைக்கழக பழைய மாணவர் அணி, உடற்கல்வி பழைய மாணவர் அணி ஆகிய 4 அணிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப் போட்டியில் இன்று மாலை 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக அணியும், யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அணியும் மோதவுள்ளன.

நாளை மாலை 2 மணிக்கு யாழ். பல்கலைக் கழக உடற்கல்வி அணியும், உடற்கல்வி பழைய மாணவர் அணியும் மோதவுள்ளனர்.

இச் சுற்றுப் போட்டியானது யாழ். மாவட்ட பாடசாலை மட்டம் தவிர்ந்த சுற்றுப் போட்டியாக நடைபெறும் முதலாவது இருபது-20 துடுப்பாட்ட சுற்றுப் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6,27)

# கலைப் பீடாதிபதியின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு

## துணைவேந்தர் சண்முகலிங்கன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 33 ஆண்டுகளாக எங்கள் பல்கலைக்கழகத்தின் புலமையாளராய் மெய்யியல் கலை இலக்கிய விமர்சனத் துறைகளில் புதிய ஒளி பாய்ச்சிய பேராசிரியர் கிருஷ்ணராஜா அவர்களின் இழப்பினால் பல்கலைக் கழக சமூகம் பெரும் துயரில் ஆழ்ந்துள்ளது என யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பேராதனைப் பல்கலைக்கழகம், மொஸ்கோ பல்கலைக்கழகம் ஆகியவற்றில் மெய்யியல் பயில்பு தந்த அறிவுத் தெளிவு, பேராசிரியர் கைலாசபதி போன்ற புலமையாளர்களுடனான சகவாசம், அயராத அறிவுத் தேடல் ஆகியவற்றின் விளைவாய் தமிழுக்கு இவர் தந்த ஆக்கங்கள் பெறுமதியானவை.

அழகியல் விமர்சன மெய்யியல், இந்து கலைக் கொள்கை, கார்ல் பொப்பரின் மெய்யியல் பற்றிய விசாரணை, சைவசித்தாந்தப் பார்வை போன்ற இவரது நூல்களினால் தமிழ்ச் சிந்தனை மரபு பெருமை பெற்றது.

பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதியாய் தெளிந்த சிந்தனையுடன் புதிய பல மேம்பாட்டுத் திட்டங்களை வகுத்து உயிர்ப்பாக இணைந்து செயற்பட்ட வேளையில் நேர்ந்த இந்த திடீர் மறைவு தாங்க முடியாதது என அவரின் இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்-பட்டுள்ளது. (ச)

# கே.பியின் உள்ளூர் முகவர் வவுனியா முகாமில் கைது!

## பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது

விடுதலைப் புலிகளின் சர்வதேச இணைப்பாளரான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனின் உள்ளூர் ஏஜென்ட் வவுனியா நிவாரணக் கிராமம் ஒன்றில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இவர் தொடர்பாக அங்கிருந்த மக்கள், இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கொடுத்த பிரத்தியேக தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இக் கைது இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்டுள்ள இவர் உருமாறன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் கே.பியின் இலங்கைக்கான முன்னணி முகவராக செயற்பட்டு வந்ததாகத் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட சகல இராணுவ உபகரணங்களுக்கும் கே.பியுடனான இரகசிய தொடர்பாளராக செயற்பட்டதாக இவர் தெரிவித்துள்ளார்.

ஆங்கிலம் மற்றும் ஐரோப்பிய மொழிகள் சிலவற்றையும் சரளமாக பேசக்கூடிய இவர் சிறந்த கல்விப் பின்புலத்தை கொண்டுள்ளார்.

அத்துடன் இவர் கட்டுநாயக்க விமான நிலையமூடாக 19 தடவைகள் நாட்டை விட்டு வெளியே சென்றுள்ளதுடன் சில தடவைகளில் சட்டவிரோதமாக படகுகளிலும் நாட்டினுள் வந்துள்ளார்.

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் கொமர்சல் வங்கி கணக்கு புத்தகமும், வேறு சில ஆவணங்களும் கடந்த 27ஆம் திகதி கோப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் ஒரு பையுடன் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 060 2212893 தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (2788)

# இன்று ஒரு தகவல்

## தொலைக்காட்சி

ஒரு நண்பர் என்னைத்தேடி வந்தார். "என்ன விடயம்?" என்று விசாரித்தேன்.

"எங்கள் வீட்டு T.V.யில் படமெல்லாம் இரண்டாகத் தெரிகிறது" என்றார்.

நானும் கொஞ்சம் நிதானமாக அவரிடம் விசாரித்தேன்.

"பெட்டியே இரண்டாகத் தெரிகிறதா? அல்லது T.V. யில் உருவம் இரண்டாகத் தெரிகிறதா?" என்று கேட்டேன்.

"உருவம் தான் இரட்டையாகத் தெரிகிறது" என்றார்.

உடனே புறப்பட்டு போய் நானும் பார்த்தேன். என் கண்ணுக்கும் உருவம் இரட்டையாகத்தான் தெரிந்தது.

அதன் பின் நாங்களிருவரும் புறப்பட்டு இன்னொரு சிநேகிதர் வீட்டுக்குச் சென்றோம்.

அவர் ஒரு தொழில்நுட்ப வல்லுநர். அவரிடம் விடயத்தைக் கூறினோம்.

அன்ரனாவில் தான் குறை என்று அங்கிருந்தே கண்டு பிடித்தார் அவர்.

அவரை அழைத்துக் கொண்டு வந்து காட்டினோம். அன்ரனா உயரமான சுவருக்குப் பக்கத்தில் இருந்தால் தான் படம் அப்படித் தெரிகிறது என்றார்.

அதன் இடத்தை மாற்றி வைத்தார். இப்பொழுது படம் நன்றாக தெரிந்தது.

உயரமான சுவருக்குப் பக்கத்திலோ அல்லது தண்ணீர்த் தொட்டிக்குப் பக்கத்திலோ அல்லது உயரமான மரத்துக்குப் பக்கத்திலோ அன்ரனா இருந்தால் T.V. யில் உருவம் இரட்டையாகத்தான் தெரியும்.

எவ்வளவோ செலவழித்து வாங்குகிறோம். அதை எப்படி பாவிப்பது என்பதைப் பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்வது நல்லது.

முதலில் உங்கள் T.V. பெட்டியை சுவருக்குப் பக்கத்தில் அல்லது அலுமாரிக்குப் பக்கத்தில் நெருக்கமாக ஒட்டி வைக்கக்கூடாது. குறைந்தபட்சம் அரை அடி தூரமாவது இடைவெளி இருக்க வேண்டும். காற்றோட்டம் தாராளமாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் ரி.வி செற் சூடேறாமல் இருக்கும்.

பலர் T.V. யின் மேல் உறைபோட்டு மூடியிருப்பார்கள். T.V. யை அனைத்தவுடன் அந்த உறையை மாட்டி விடக்கூடாது. சூடாறுவதற்கு போதுமான அவகாசம் கொடுக்க வேண்டும். அரை மணித்தியாலமாவது ஆகும். அதன் பின்னர் உறையை போடலாம்.

T.V. பெட்டி மீது சூரிய வெளிச்சம் படாத இடமாக பார்த்து வைக்க வேண்டும்.

நிகழ்ச்சியை பார்த்து முடித்தவுடன் T.V. யில் உள்ள சுவிச்சை அணைத்துவிட வேண்டும். அதன் பின்னர் பிளக்கில் உள்ள சுவிச்சையும் அணைத்து விட வேண்டும்.

அதேபோல் T.V. யைப் போடும் போது – முதலில் பிளக்கைப் போடவேண்டும். அதன் பின்னர் தான் T.V.யைப் போட வேண்டும்.

உங்கள் கண்ணையும் கவனிக்க வேண்டும். T.V.க்கு பக்கத்தில் போய் உட்காராதீர்கள். எட்டத்தில் தள்ளி உட்கார்ந்து பாருங்கள். வெளிச்சமில்லாத அறைக்குள் உட்கார்ந்து T.V.பார்ப்பது கண்ணுக்குக் கெடுதல். உங்களுக்குப் பின்னால் 40W அல்லது 60W. மின்குமிழை ஒளிரவிட்டு T.V. பாருங்கள். அது தான் நல்லது.

எங்க வீட்டுக்காரர் எப்பொழுது பார்த்தாலும் T.V. யையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார். என்று டாக்டரிடம் சொன்னார் ஒரு அம்மா.

அதில் என்ன தப்பு?" என்று கேட்டார் டாக்டர்.

"கரண்ட் கட் ஆனால் கூட டோர்ச் லைட்டை அடித்தாவது அதைப் பார்த்துக்கொண்டு இருக்கிறாரே அதுதான் சந்தேகமாக இருக்கிறது" என்றார் அந்த அம்மா.

"இதற்கு அன்டனாவை சரி பண்ணி பிரயோசனமில்லை. அவரையே சரி பண்ணியாக வேண்டும்" என்றார் டாக்டர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கில கற்கை நெறி நேர்முகப்பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக நடத்தப்படும் ஆங்கில கற்கை நெறிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற உள்ளதாகவும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறும் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார்.

அழைக்கப்பட்டோர் விபரம் வருமாறு,

எம். எம். டொமல்ரிடா - பண்டத்தரிப்பு, ஏ. அசானி - கொக்குவில் மேற்கு, ரி. துரேந்திரா - சித்தன் கேணி, எம்.எம்.என். - மேனீசியா - யாழ்ப்பாணம், பி. யசோதினி - கோப்பாய், கே. கிருஷ்ணசாந்தினி - யாழ்ப்பாணம், பி. தில்லைவனஜா - மீசாலை, என். டர்சி - சங்கானை, எஸ். ரம்மியா - நீர்வேலி, ஏ. சாமினி - யாழ்ப்பாணம், ஜி. பிரவீனா - சாவகச்சேரி, இ.ஜெ. ஆன். சில்விக்ஸ் தயாளினி - பண்டத்தரிப்பு, ரி. தாரணி - பருத்தித்துறை, என். உஷா - காரைநகர், எஸ். துவாரகா - மல்லாகம், எஸ். ரம்யா - சண்டிலிப்பாய், கே. லக்ஷனா - வல்வெட்டித்துறை, எஸ். சியாமலி - கல்கிசை, எஸ். ஜான்சி - யாழ்ப்பாணம், எஸ். பாரதி - பருத்தித்துறை, யூ. மிதுஜா - நல்லூர், ரி. நிருபாலினி - கரவெட்டி, எஸ். கீர்த்தனா - சுன்னாகம், ரி. நிதர்ஜா - வல்வெட்டித்துறை, கே. விக்னேஸ்வரி - யாழ்ப்பாணம், ஜெ. ஜெயசுதன் - சங்கானை, எஸ். அனந்தினி - கோப்பாய், கேமாலக்மி - வல்வெட்டித்துறை, ரி. வினோதாஜினி - கரவெட்டி, வி. கீதாசினி - பண்டத்தரிப்பு, எம். சந்துரு - உரும்பிராய், எம். பாலசர்ணி - அரியாலை, ரி. தனசானி - இணுவில். (ஓ-4)

# வலுவிழந்தோர் புனர்வாழ்வு சங்கத்திற்கு நிரந்தரமான காணி, கட்டடம் வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிலையம் கடந்த சுமார் 20 ஆண்டுகளாக யாழ் மாவட்டத்திலுள்ள பல்வேறுவகையான மாற்று வலுவுடையோர்களிற்கு பல புனர்வாழ்வு சேவைகளினை வழங்கி வருகின்றது. இவர்களில் விழிப்புலன் இழந்தவர்கள், செவிப்புலன் இழந்தவர்கள், பேச்சு இழந்தவர்கள், மற்றும் உடலுளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள் எனப் பல்வேறு வகைகளாகப் பாதிக்கப்பட்டு சுயமாக செயற்பட முடியாதவர்களிற்கு உதவிக்கரம் நீட்டி வேண்டிய உபகரணங்கள், ஆலோசனைகள், சிகிச்சைகள், பயிற்சிகள், தொழில் வழிகாட்டல்கள் பயிற்சிக் காலத்தில் தங்குவதற்கான வசதிகள் ஆகியவற்றை வழங்கி வருகிறது.

ஆனால் இதற்கென ஒரு சொந்தமான காணியையோ, கட்டடமோ இல்லாததால் தற்காலிக வீடுகளிலேயே இன்றுவரை இயங்கி வருகின்றது. இந்த வீட்டின் சொந்தக்காரர்கள் எந்நேரத்திலும் வீட்டினைத் திருப்பித் தரும்படி கேட்கலாம். அச் சந்தர்ப்பத்தில் இத்தனை மாற்று வலுவுடையோர்களிற்குமான செயற்பாடுகளும் நிர்க்கதியற்றதாக்கப்பட்டு நடுத்தெருவில் நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு விடும்.

இதனை மனத்திற்கொண்டு யாழ். மாநகரசபை எல்லைக்குள்ளோ, அல்லது அதை அண்டிய பகுதிகளிலோ பிரதான வீதிக்கண்மையில் அல்லது மாற்றுவலுவுடையோர்கள் இலகுவாக நடமாடக் கூடிய பாதையுள்ள பகுதியிலோ எமது நிலையத்திற்கான வீட்டுடன் கூடிய காணியையோ, அல்லது வெறுங் காணியையோ நன்கொடையாக வழங்கி உதவுமாறு வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கச் செயலாளர் கே. கோபாலகிருஷ்ணன் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-6)




சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலக தேசிய நூலக வார இறுதிநாள் விழாவில் எழுத்தாளரும் பிரதம விருந்தினருமான வ. சின்னப்பா உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

## இராசி பலன்


30.05.2009
(வைகாசி 16, சனிக்கிழமை)
சப்தமி பின்னிரவு 2.41 மணிவரை
ஆயிலியம் முற்பகல் 10.25 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சிறுவியாதி, மனக்கிலேசம், காரிய இடையூறு, எதிர்பாராத நன்மை. |
| இடபம் | உறவினர் சந்திப்பு, சுபசெலவு, பயந்த சுபாவம், முயற்சி தாமதம். |
| மிதுனம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், அந்நியர் சந்திப்பு, மனோதைரியம், போசனசுகம். |
| கடகம் | போசன சுகக்குறைவு, குடும்பக் கவலை, விவாதம், முயற்சி தாமதம். |
| சிங்கம் | ஆழ்ந்த சிந்தை, அதிக பிரயாசை, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம். |
| கன்னி | சோம்பல் நிலை, காரிய அலைச்சல், பிறருக்கு உதவுதல், குடும்பக் கவலை. |
| துலாம் | எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, உறவினர் வருகை, பெருமையடைதல். |
| விருச்சிகம் | தொழில் மேன்மை, உற்சாகம், போசன சுகம், காரிய அனுகூலம். |
| தனுசு | எதிர்பாராத செலவு, தந்தை வழி உறவு, முயற்சி தாமதம், கட்டுப்பாடு. |
| மகரம் | காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு, போசன சுகம், வாகன பயம். |
| கும்பம் | குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, விருந்துபசாரம். |
| மீனம் | சத்துரு ஜெயம், காரிய சித்தி, நண்பர்கள் சந்திப்பு, சுவாரஸ்யம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 110 | 140 | 100 |
| உருளைக்கிழங்கு | 130 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 40 | 70 | 80 |
| தக்காளி | 360 | 400 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 80 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 65 | 90 | 80 |
| பூசணி | 15 | 20 | 20-50 |
| புடோல் | 70 | 80 | 60 |
| வாழைக்காய் | 60 | 70 | 60-65 |
| சின்ன வெங்காயம் | 35-50 | 50-70 | 60-65 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 180 |
| பாகற்காய் | 80 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 |
| கரணைக் கிழங்கு | 50 | 60 | 80 |
| பயிற்றங்காய் | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 70 | 100 | -- |
| கறிமிளகாய் | 120 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 400 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | [illegible] | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | [illegible] | 35 | 25-30 |






யாழ்.தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் நடத்தப்பட்ட தொழில்வழங்குநருக்கான கருத்தரங்கு அண்மையில் திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையக மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேசிய பயிலுநர் கைத்தொழில்பயிற்சி அதிகாரசபையின் மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் ஆகியோர் உரையாற்றுவதையும், கைத்தொழில் திணைக்கள மாவட்ட அதிகாரி ப.ராகவன் கருத்தரங்கு பற்றி விளக்கமளிப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.(படங்கள்:அலுவலக செய்தியாளர்)

## மாகாண மட்ட புலமைப் பரிசில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான மாகாண மட்ட புலமைப்பரிசில் பரீட்சை-3 எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

அதிபர்கள் தமக்குரிய பரீட்சை வினாப் பொதிகளை பெற்றுக்கொள்ளுமாறும் பரீட்சை புள்ளிப் பகுப்பாய்வின் ஒரு பகுதியை *மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி), வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம், வரோதயநகர், திருகோணமலை* என்ற முகவரிக்கும் மறுபிரதியை வலயக் கல்வி ஆரம்பக் கல்விப் பிரிவிற்கும் அனுப்பி வைக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ-7)

## சிறுவர் முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய விசேட கல்வி தேவையுடையோருக்குரிய சிறுவர் முகாம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-30)

## வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

உயரப்புலம் ஆனைக்கோட்டை அடைக்கல அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத் தந்தை அருட்பணி மௌலிஸ் அடிகள் தலைமையில் ஆரம்பமாகி செபமாலையுடன் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை காலை 7மணிக்கு திருவிழாத் திருப்பலியும் அன்னையின் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது. (ஓ)

✠✠✠

(ஊர்காவற்றுறை)

கரம்பொன் வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத் தந்தை அருட்பணி ஏ.சி.கிறிஸ்ரோப்பர் தலைமையில் கடந்த 27 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை காலை 7மணிக்கு திருவிழாத் திருப்பலியும் அன்னையின் திருச்சொரூப பவனி ஆசீர் ஆகியவற்றுடன் திருவிழா நிறைவு பெறுகிறது.(ஓ-72)

## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடத்துவதற்கான அறிவுறுத்தல்

நீர்வேலித் தரவையில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடாத்துவதற்கு வலி.கிழக்கு பிரதேச சபையின் அனுமதி பெறப்படல் வேண்டும் என்றும்இதற்காக பிரதேச சபையின் நீர்வேலி உப அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் அனுமதியின்றி நடத்தப்படும் சவாரிப் போட்டிகள் பிரதேச சபையினரால் தடைசெய்யப்படும் என்றும் வலி.கிழக்கு பிரதேசசபை செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## வடக்கு மாகாண தொழில்துறை திணைக்கள கண்காட்சி இம்முறை யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

மாகாண சபைகளால் நடாத்தப்பட்டு வரும் இவ்வாண்டிற்கான வடக்கு மாகாணத்தின் தொழிற் துறைத் திணைக்கள கண்காட்சி இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சி நவம்பர் மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளதால் இதற்கான ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாவட்டத்தில் இருக்கக்கூடிய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாகவும், அவர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், புதிய தொழில் முயற்சிகளை அறிமுகப்படுத்தும் முகமாகவும், இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில் பங்குபற்றுபவர்களுக்கும் மற்றும் வெற்றியாளர்களுக்கும் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இக் கண்காட்சி யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்படவுள்ளதால் இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் தத்தம் பிரதேச செயலகங்களில் உள்ள தொழில்துறை நிகழ்சித்திட்ட உதவியாளர் ஊடாகவோ அல்லது மாவட்டச் செயலக தொழில் துறை திணைக்களத்தில் நேரடியாகவோ தொடர்புகொண்டு தகவல்களை பெற்றுக்கொள்ளுமாறு தொழில் துறைத்திணைக்கள மாவட்ட அலுவலகர் பி.ராகவன் தெரிவித்துள்ளார்.

இக்கண்காட்சி 2003, 2007 காலப் பகுதிகளில் யாழ். மாவட்டத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-7)

## காணிக் கச்சேரி மூலம் தெரிவு செய்யப்பட்ட பெயர்ப்பட்டியல் அனுமதிக்காக அனுப்பிவைப்பு

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஊரெழு பொக்கணை அச்செழு, வேவிபுரம் ஆகிய பகுதிகளில் காணி நிர்ணய திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டு நடத்தப்பட்ட காணிக்கச்சேரி மூலம் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் விளம்பரப்படுத்தப்பட்டு ஆட்சேபனை எதுவும் கிடைக்காமையினால் மாகாண காணி ஆணையாளரின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (ஓ-134)



தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் முதலாம் இடம்பெற்ற கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி மாணவர்களையும் , பொறுப்பாசிரியர் மற்றும் பயிற்றுவிப்பாளரையும் படத்தில் காணலாம்.

## யாழ்.பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் இறுதி பஸ் சேவை நேரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலிருந்து சகல பாதைகளிலும் செயலாற்றும் இறுதி பேருந்து சேவைகள் யூன்மாதம் முதலாம் திகதியிலிருந்து மாலை 6 மணியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் வடக்கு பிரதான பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஓ-6)

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சங்குவேலி வடக்கு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபையால் ஆலய கட்டட வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும் மாட்டு வண்டிச் சவாரிபோட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நீர்வேலி சவாரி திடலில் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (ஓ-4)

## தூய ஆவி பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தூய ஆவி பெருவிழா திருவிழிப்பு ஆராதனை இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிமுதல் அதிகாலை வரை புனித மடுத்தீனார் குருமட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகள் மாலை 6.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி அதன் பின் திருவிழிப்புத் திருப்பலி, திருவிழிப்பு ஆராதனை என்பன நடைபெற்று அதிகாலை ஆயர் தலைமையிலான தூய ஆவியார் பெருவிழாத் திருப்பலியோடு நிறைவுபெறும்.

தூய ஆவியாரின் அருட்பொழிவு பெற அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு யாழ்.ஆயர் இல்ல இறைதியானக் குழுவினர் கேட்டுள்ளனர். (ச-14)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 3 தொடக்கம் தரம் 11 வரை சைவசமய நெறி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## இருபாலை கிழக்கு கிராமத்தின் மின்னிணைப்பு வேலை பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இருபாலை கிழக்கு கிராமத்திற்கு அரசடி வீதியிலிருந்து மின்னிணைப்பு சேவைகள் முடிந்ததையிட்டு அப்பகுதி மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.(ஓ-134)




## பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-134)

## பாதீனியங்களை அழிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேசத்தில் வீட்டுச் சுற்றுப்புறங்களிலுள்ள பாதீனியங்களை அழிப்பதற்கு அப் பகுதிகளிலுள்ள கிராமசேவையாளர்களும் சுற்றாடல் உத்தியோகத்தரும் இணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோப்பாய் பிரதேச செயலரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-134)

# மொழி-இலக்கியம்-பண்பாடு 08

பல்வேறு மொழிகளிலுள்ள நிறப் பெயர்களையும் பண்பாட்டையும் பற்றிக் கூறும் ஒரு மானிடவியலாளர் பின்வருமாறு விளக்கித் தருகிறார்.

``மேலைத்தேயத் தொழில்நுட்ப அடிப்படையில் நிறம் ஒரு பொதுமைப் பண்பு வாய்ந்த கருத்து அல்ல. பல்வேறு மொழிகளில் நிறப் பண்பின்வேறுபாடு, அந் நிறங் குறிக்கும்சொற்கள் இயற்கைச் சூழ்நிலையின் பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களின் பண்புகளுடன் கொண்டுள்ள தொடர்பினாலேயே முக்கியமாகத் தீர்மானிக்கப் படுகின்றது.

குறிப்பிட்ட சமூகமொன்றிலே மொழியானது அச் சமூகத்தின் பண்பாட்டின் ஓர் உட்பகுதியாய் அமைகின்றது. ஒவ்வொரு மொழியிலுமுள்ள சொற்பொருள் வேறுபாடுகளும அம் மொழி வழங்கும் சமூகத்தின் பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள், நிறுவனங்கள், செயற்பாடுகள் ஆகியவற்றின் தன்மைகளையே பிரதிபலிக்கின்றன. ஒவ்வொரு மொழியும் அம்மொழி பேசுவோரின் அனுபவத்தினை வெளிப்படுத்தவும், பகுப்பாய்வு செய்யவும்,வகைப்படுத்தவும் குறிப்பிட்ட தனித்துமான வழிகளைக் கையாளுகின்றன.

அவ் வழிகளிலே மொழியின் சொற்களும் இலக்கணமுமாகும்.இவை அம் மொழி பேசும் மக்களின் பழக்கங்கள்; வழங்கங்கள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன. உதாரணமாக His Cow: His Cows என்னும் ஆங்கிலத் தொடர்களைத் தமிழிலே மொழிபெயர்க்குமிடத்து பல இடர்பாடுகள் ஏற்படுகின்றன.

தற்காலத் தமிழ் வழக்கில் பெயர்ச்சொற்கள் பன்மை உருபு பெறாமை கவனிக்கற்பாலது.

அதனால் மேற்குறிப்பிட்ட இரு ஆங்கிலத் தொடர்களும் இக் காலத் தமிழ்ப் பேச்சு வழக்கில் அவனுடைய மாடு என்ற ஒரு தொடராகவே அமையும்.அத்துடன் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கு, படர்க்கைச் சுட்டுப் பெயரிலே பேசுபவருக்கு அருகில்,கேட்பவருக்கு அருகில்,பேசுபவர்-கேட்பவர் ஆகிய இருவருக்குமே தூரத்தில் என்ற மூவகைப் பாகுபாட்டைப் பேணுகின்றது.ஆகவே His என்னும் ஆங்கிலச் சொல்லினை அவன், இவன், உவன் என்னும் மூன்று சொற்களுள் எதனாற் குறிப்பது என்னும் இடர்பாடும் உண்டு.

இத்தகைய வேறுபாடுகள் ஓரின மக்கள் தம் அனுபவத்தை வெளிப்படுத்த, பகுப்பாய்வு செய்ய,வகைப்படுத்தப் பயன்படுத்தும் வழக்கமான, விருப்பமான வழிகளையே பிரதிபலிக்கின்றன.

சமூக உண்மைக்கும் வழிகாட்டியாகவே அமைவதே மொழி சமூகப் பிரச்சினைகள், சமூகப் போக்குகள் ஆகியன பற்றிய எம் சிந்தனையை மொழி பெரிதும் பாதிக்கின்றது. சமூக முயற்சிகள் மல்கியுள்ள இவ்வுலகில் மனிதர் வாழ்வது மாத்திரமன்றி அவர்கள் சமூகத்தின் கருத்துத் தொடர்பின் ஊடகமாயுள்ள குறிப்பிட்ட மொழயிலே தங்கியிருப்பவர்களாயுமுள்ளனர். சாதாரண கருத்துத் தொடர்புப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத்தான் மொழியின் தேவை மனிதருக்கு ஏற்படுவதுண்டு என எண்ணுவது தவறாகும்.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மொழிப் பழக்கங்களும் வழக்கங்களுமே அதன் "உண்மையான உலகினைப்" படைக்கின்றன எனலாம். இரு மொழிகள் ஒரு சமூக உண்மையினைப் பிரதிபலிக்கமாட்டா. ஏனெனில் ஒரு மொழி இன்னொரு மொழியிலிருந்து ஏதோ வகையில் வேறுபட்டே இருக்கும்.சமூகத்திற்கும் மொழிக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதன் காரணமாக குறிப்பிட்ட ஒரு மொழியானது அதற்குத் தொடர்பான சமூகத்தினையே பிரதிபலிக்கும்.

ஒரு சிறிய கவிதையினை விளங்கிக் கொள்வதென்றால், அக விதையிலுள்ள ஒவ்வொரு சொல்லும் குறிக்கும் சாதாரண பொருளினை விளங்கிக் கொள்வதென்பதல்ல.

அச் சொற்களாலேயே பிரதிபலிக்கப்படும் சமூக வாழ்வின் முழுமையைக் கிரகிப்பதேயாகும்.மொழி வெறுமனே அனுபவத்தை புலப்படுத்துவது மாத்திரம் இன்றி அவ் அனுபவத்தை வரைவிலக்கணப்படுத்துவதாகவும் அமைகின்றது.



ஒரு பண்பாட்டினுடைய சமூகத்தின் உணர்வினை புலப்படுத்துவதற்கு மொழியில் உள்ள பல பண்புகள் உதவுகின்றன.

அவற்றுள் முக்கியமானது மொழியின் ஆக்கப் பண்பேயாகும். பண்பாட்டினை பிரதிபலிக்கும் சொற்கள் பல குறிப்பிட்ட ஒரு மொழியில் பண்டைக்காலம் தொட்டே இருந்து வருவதை நாம் அவதானிக்கலாம்.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

ஒரு சமூகப் பண்பாட்டு தன்மை அடிப்படையில் மாற்றம் பெறாவிட்டாலும் அதனுடைய மேலமைப்புப் பண்புகள் சில பல்வேறு காரணிகளால் பிற பண்பாட்டுத் தொடர்பு அரசியல் மாற்றங்கள் போன்றவற்றை உதாரணங்களாகக் காட்டலாம்) மாற்றம் அடைந்து வருவதையும் நாம் காணலாம். இத்தகைய மாற்றங்களுக்கு முகம் கொடுத்து அம் மாற்றங்களின் உணர்வுகளை புலப்படுத்துவதற்கு சமூகத்தின் மொழி தன்னை ஆக்கிக் கொள்கிறது. (முற்றும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை



கார்வர் ஆரம்பப் பாடசாலையின் அதிபர் தான் டாக்டர் மார்த்தா கோலியர். (Dr. Martha Collier). ஒபாமா அவரை காலை 8.30 மணிக்கு சந்திப்பதாக இருந்தது. அவர் பள்ளிக்கூடத்திற்குப் போனபோது அதிபர் ஒரு கறுப்பின இளம்பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்தார். அவளை வீட்டுக்குப் போய் ஆறுதல் எடுக்கும்படியும் தன்னாலான உதவியைச் செய்வதாகவும் கூறி வழியனுப்பி வைத்தார்.

பின் ஒபாமாவின் பக்கம் திரும்பி அவருக்கு அந்த இளம்பெண்ணைப் பற்றிக் கூறினார். அவள் அந்தப் பாடசாலையின் படிக்கும் ஒரு குழந்தையின் இளம்தாய்.

போதை மருந்துக்கு பழக்கப்பட்டவள். அவளின் நண்பன் கடந்த இரவுதான் கைதாகி ஜாமினில் வெளிவர முடியாதபடி தடுத்து வைக்கப்பட்டுள்ளானாம். டாக்டர் கோலியர் ஒபாமாவைப் பார்த்து, உங்கள் அமைப்பு அவளைப் போன்று பெண்ணுக்கு என்ன செய்யும் என்று கேட்டாள். டாக்டர் கோலியர் 20 ஆண்டுகளாக ஆசிரியராகப் பணிபுரிந்து மேலும் கடந்த 10 ஆண்டுகளாக அதிபராக இருக்கிறாள். ஒரு காலத்தில் வெள்ளையர்களான தன் அதிகாரிகளுடனும் இப்போது கறுப்பு அதிகாரிகளுடனும் போரிட்டுத் தான் தன் பணியைச் செவ்வனே நடத்திக்கொண்டிருந்தாள்.

கார்வர் பாடசாலைக்கு வந்தபின் அங்கு ஒரு குழந்தை- பெற்றோர் மையம் ஒன்றை ஆரம்பித்து, இளம் பெற்றோர்களைத் தங்கள் குழந்தைகளுடன் வகுப்பறையில் ஒன்றாகப் படிக்க ஆவன செய்தாள்.அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு எது நல்லது என்று அறிய ஆவலாக வந்தனர். அவர்களுக்கு சத்துணவு, சுகவாழ்வு, மனஅழுத்தத்தை எப்படிச் சமாளிப்பது என்ற விடயங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன.

மேலும் எழுத்தும் எண்ணும் சொல்லிக் கொடுக்கப்பட்டன.இந்தப் பெற்றோர்களால் தங்கள் குழந்தைகளுக்கு எழுத, வாசிக்க பழக்கமுடிந்தது. முடியுமானவரை பெற்றோர்கள் படித்து உயர்தரக் கல்விக்கு இணையான திறமையைப் பெற்று தொழில்வாய்ப்பையும் பெற உதவுகிறார்கள்.

இந்தப் பெற்றோர்கள் ஒவ்வொரு நாளும் பாடசாலை முடிந்ததும் தங்கள் பழைய சூழல்களுக்குள் போய்விடுகின்றனர். குழந்தைகள் பாடசாலையை விட்டு வெளியேறிய பின் பெற்றோர் இந்தப் பக்கம் வரமாட்டார்கள்.ஆகையால் சூழலை மாற்றுவது எப்படி என்றுதான் யோசிக்கவேண்டும். எதற்கும் ஒபாமா அந்தப் பெற்றோர்களைக் கண்டு பேசினால் அவர்களின் மனதைப் புரிந்து கொள்ள முடியும் என்று அதிபர் கூறினாள்.

இருவரும் வெளியே வந்தபோது 5 வயது நிரம்பிய குழந்தைகள் வரிசையில் போய்க் கொண்டிருந்தார்கள்.அவர்கள் ஒபாமாவுக்கும் அதிபருக்கும் கையசைத்துக் குதூகலித்துக் கொண்டு தங்கள் ஆசிரியர்களுடன் செல்வதைப் பார்த்த அதிபர் இவ்வளவு அழகும் தூய உள்ளமும் கொண்டமைந்த குழந்தைகள் இன்னும் 5 ஆண்டுகளில் பெரிய மாற்றத்துக்குள்ளாவார்கள். அவர்களுடைய கண்கள் ஒளியிழந்துவிடும்.குரல் அடைத்து உள்ளம் துயரங்களை உள்ளே சுமந்து நிற்பதை அவர்களின் ஒளியிழந்த கண்கள் காட்டிநிற்கும் என்றார்.

ஒபாமா அந்தப் பெற்றோர்களுடனும் குழந்தைகளுடனும் பல மணித்தியாலங்களை செலவிட்டார். பலவாரங்களாக இது நிகழ்ந்தது. இளம் தாய்மார்களில் அனேகருக்கு வயது 20 தான் இருக்கும். எல்லோரும் அல்ஜெல்ட்டில் தான் பிறந்து வளர்ந்தவர்கள். அவர்களும் பால்யத் தாய்மார்களால் பெற்றெடுத்து வளர்க்கப்பட்டவர்கள்.14 வயதில் தாங்களே தாய்மாராகிவிட்டது பற்றி கூச்சமின்றிக் கூறுவார்கள். பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறிவிடுவார்கள். தங்கள் வாழ்வில் அடிக்கடி வந்துபோகும் தந்தைமார்கள் பற்றி எடுத்துரைப்பார்கள். தங்கள் வாழ்வில் ஒரு நல்ல விடிவு ஏற்படுமென காத்து பூத்த கண்கள் அவர்களுடையன.

70

சமூகப்பணியாளருக்காக, சமூகக் கொடுப்பனவு காசோலைகளை காசாக்க, 5 மைல்களுக்கு அப்பாலுள்ள சுப்பர் மார்க்கெற்றுக்குச் செல்லும் பஸ் வண்டிக்காகக் காத்திருத்தல், பழகிப் போய் எதையிட்டும் குறை கூறாது சகித்துக் கொள்ளும் வாழ்வு அவர்களுடையது.ஆயினும் அவர்களிடம் ஆசைகள் நிறைய இருந்தன. அவர்களு டைய வாழ்வில் ஒளியை உண்டாக்க ஒபாமா திட்டமொன்றைத் தீட்டினார்.

அல்ஜெல்ட்டில் உள்ள வீடுகளைத் திருத்தி, இருந்த வசதிகளை மீட்டுக்கொடுத்து குறைந்த பட்ச வசதிகளைச் செய்து கொடுத்து அக் குடியிருப்பாளர்களின் வாழ்வில் ஒளியேற்ற முயற்சித்தார்.அதற்கான முறைப்பாட்டுப் படிவங்களைத் தயாரித்து குடியிருப்பாளர்களுக்கு கொடுத்தார்.அதை நிரப்பிய பின் ஒபாமா அவர்களைக் கூட்டங்களுக்கு அழைத்துக் கலந்துரையாடுவார்.அப்போது ஒபாமாவின் கவனத்திற்கு பத்திரிகையில் வந்த அரசாங்க அறிவித்தலொன்று கொண்டு வரப்பட்டது. அல்ஜெல்ட்டைப் பராமரிக்கும் முகாமையாளரை அலுவலகக் கட்டடத்தில்

**ஜம்பொன்**

பொருத்தப்பட்டுள்ள அஸ்பஸ்ரோவை நீக்கப் போவதாக அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தது.மின்சாரக் குழாய்களுக்கு பாதுகாப்பாக அஸ்பஸ்ரோஸ் போடுவது வழக்கம். ஆனால் புற்றுநோய் போன்ற நோய்கள் ஏற்படுவதால் அவற்றின் பாவனை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையினால் ஏற்கனவே பாவனையிலிருப்பதை கழற்றி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். (தொடரும்)

# 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது குறித்து இதுவரை எந்தத் தீர்மானமும் இல்லை

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது பற்றி இதுவரை எந்த இறுதித் தீர்மானமும் எடுக்கப்படவில்லையென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

13ஆவது திருத்தத்துக்கு அமைய ஏற்கனவே மாகாண சபைகள் அமைக்கப்பட்டுள்ளபோதும் அதிகாரங்களைப் பகிர்வது பற்றி தீர்மானம் எடுக்கவில்லையென நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த ஊடகத்துறை அமைச்சர் லஷ்மன் பிரியதர்சன யாப்பா கூறினார்.

கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டிருப்பதுடன் வடக்கு மாகாணசபையொன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இதற்கு மேலதிகமாக 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது பற்றி இது வரை எந்தத் தீர்மானத்தையும் நாம் எடுக்கவில்லை என்றார் அவர்.

வடபகுதிக்கான தேர்தலில் வெற்றிலைச் சின்னத்திலா அரசாங்கம் வேட்பாளர்களை நிறுத் தும் என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் பெரும்பாலும் அவ்வாறே முடிவெடுக்கப்படும் எனக் கூறினார்.

இந்த விடயம் குறித்து நாம் இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை. கூட்டணியில் போட்டியிடும் ஏனையவர்களும் ஒரே சின்னத்தில் போட்டியிட்டால் சிறந்தது என அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டுமென இந்தியா உட்பட சர்வதேசநாடுகள் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# சபாநாயகரின் மகனுக்கு சுதந்திர கட்சியின் அமைப்பாளருக்கான கடிதம் கையளிப்பு

(கொழும்பு)

சபாநாயகர் வி.ஜே.மு. லொக்குபண்டாரவின் மகன் உதித் லொக்குபண்டாரவிற்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பதுளை மாவட்ட அமைப்பாளருக்கான நியமன கடிதத்தினை ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ வழங்கி வைத்தார்.

உதித் லொக்குபண்டாரவின் திருமண வைபவத்திற்கு வருகை தந்த போதே ஜனாதிபதி அவருக்கான நியமனக் கடிதத்தை வழங்கி வைத்தார்.

இதனால் மணமக்களும் திருமணத்திற்கு வருகைதந்திருந்தோரும் பெரும் திகைப்படைந்தனர். திருமண பரிசாகவே இந்த நியமனக் கடிதம் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவரின் திருமணத்திற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவருமே கையொப்பமிட்டுள்ளனர்.

இந்த திருமண வைபவத்திற்கு அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர். இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சி, சபா நாயகரின் மகனுக்கு அப்புத்தளை அமைப்பாளர் பதவியை வழங்குவதற்கு ஏற்கனவே தீர்மானித்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

# புலிகள் தாக்கிவிட்டு தப்பி ஓடலாம் இராணுவ ரீதியாக மீள் இணைய வாய்ப்பில்லை

## இராணுவத் தளபதி சரத் பொன்சேகா

(கொழும்பு)

தோற்கடிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கிவிட்டுத் தப்பியோடும் நடவடிக்கைகளில் ஈடுபடலாம். எனினும் இராணுவ ரீதியாக அவர்கள் மீள் இணைய வாய்ப்பில்லை என இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

முன்னர் ஒரு காலத்தில் கையாள்வதற்கு மிகவும் கடினமான குழு எனக் கருதப்பட்ட புலிகள் இயக்கத்தில் தற்பொழுது மறைந்திருக்கும் ஒரு சிலரைத் தவிர புலிகளின் தலைமைத்துவம் முற்றுமுழுதாக அழித்தொழிக்கப்பட்டு விட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நான்காவது ஈழப்போரை வெற்றி கொண்ட படைப்பிரிவு தளபதிகளைப் பாராட்டும் நிகழ்வு கொழும்பு இராணுவ தலைமையகத்தில் அமைந்துள்ள விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் காலை இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன் சேகா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறுகையில்,

நாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தின் முதலாம், இரண்டாம், மூன்றாம் தரங்களை முற்று முழுதாக அழித்து விட்டோம். அவர்கள் தாக்கிவிட்டு ஓடும் தந்திரத்தைக் கடைப்பிடிக்கலாம்.

ஆனால் அவர்கள் இராணுவ ரீதியாக முற்று முழுதாக ஒடுக்கப்பட்டுள்ளனர். நாம் எங்கள் துருப்புக்களின் பலத்தை விஸ்தரித்துள்ளதுடன் யுத்தத்தை நடைமுறை அணுகுமுறையின் அடிப்படையில் இரண்டு வருடங்களும் 10 மாதமுமான கால எல்லைக்குள் முடித்துவிட்டோம்.

190 அதிகாரிகளும் 5 ஆயிரத்து 200 துருப்புக்களும் பலியானதுடன் 27 ஆயிரம் படையினர் இந்த நடவடிக்கைகளின் போது காயமடைய நேரிட்டது. அதேவேளை 22 ஆயிரம் புலிகள் கொல்லப்பட்டதுடன் 9 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் அவர் கூறினார். (ஓ-6)

# சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவிக்கு அமெரிக்கா தடைகளை ஏற்படுத்தக்கூடாது

## அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை கோரியுள்ள 1.9 மில்லியன் கடன் உதவி பெறுவதற்கு அமெரிக்கா தடைகளை ஏற்படுத்தக்கூடாது என அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க காங்கிரஸின் வடக்கு கரோலினா பிரதிநிதிகள் இந்தக் கருத்தை கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனை தெரிவித்தனர். நாட்டில் சமாதானம் தோன்ற ஆரம்பித்துள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி அவசியமானது என அதன் உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெயர்ந்துள்ளவர்களின் நிலைவரங்கள் தொடர்பின் அமெரிக்காவின் நிலைப்பாடு ஒன்று காணப்படுவதாக அவர் இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை காங்கிரஸ் பிரதிநிதிகள் வவுனியாவிற்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டதன் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (ஓ-4)

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் "3A, 2AB" சித்தி பெற்ற வலிகாம கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு -09.05.2009

### பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை





### பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி





# மேற்கு நாட்டு இராஜதந்திரிகளை அதிர்ச்சியில் ஆழ்த்திய இலங்கை அரசின் வெற்றி

(ஜெனீவா)

தமிமீழ விடுதலைப்புலிகளை தோல்வி காண செய்தமைக்காகவும் பொதுமக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தியமைக் காகவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்வுத் திட்டமொன்றை நிறைவேற்றியதை யடுத்து இலங்கை அரசாங்கம் விஸ்தாரமான வெற்றி ஒன்றுக்கு உரிமை கோரியுள்ளது.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கை ஒரு உள்நாட்டு விவகாரம், அதில் வெளியார் தலையீடு செய்யவேண்டிய அவசியமில்லை என இலங்கையால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டத்திற்கு சீனா, இந்தியா, எகிப்து, கியூபா உட்பட 29 அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஆதரவளித்துள்ளன.

அத்துடன், இந்தத்தீர்வு யோசனையானது முகாம்களிலுள்ள 2இலட்சத்து 70 ஆயிரம் பொதுமக்களை உதவி வழங்கும் குழுக்கள் சென்றடைவதை "அனைத்தும் பொருத்தமாக இருந்தால் மாத்திரமே அனுமதிப்பது" என்ற கொழும்பின் வலியுறுத்தலுக்கும் ஆதரவளித்துள்ளது.

இதேவேளை, விடுதலைப்புலிகளை களைய மேற்கொண்ட இறுதி இராணுவ நடவடிக்கையை அடுத்து, இலங்கையில் மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் குறித்தும் பரிசீலிப்பதற்கான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நடைபெற்ற இரு நாள் விசேட கூட்டத்தில் கிடைத்த பெறுபேறு குறித்து மேற்குலக இராஜதந்திரிகளும் மனித உரிமை ஆர்வலர்களும் பெரும் அதிர்ச்சியை வெளியிட்டுள்ளனர்.

இந்த வாக்கெடுப்பானது முழுமையாக ஏமாற்றத்தைத் தருவதுடன் மனித உரிமைகள் பேரவைக்கு குறைவான மதிப்பீட்டை காட்டுவதாக உள்ளது என சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்த முடிவானது மனித உரிமைகள் பேரவையின் அனைத்து நோக்கங்களையும் கேள்விக்குறியாக்கியுள்ளதாக மேற்குலக நாடுகள் கருத்து வெளியிட்டுள்ளன.

47 உறுப்பினர்கள் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அனைத்து உறுப்பு நாடுகள் சம உரிமையை உடையன. எந்த ஒரு நாட்டுக்கும் வீட்டோ உரிமை கிடையாது.

இதேவேளை பேரவை சீர்திருத்தம் செய்யப்படுமானால் அதில் இணைவதற்கு அமெரிக்கா இணக்கம் தெரிவித்திருந்தது. அண்மையில் ஆத்திரமூட்டும் வகையில் பேரவையில் ஈரான் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட உரையையடுத்து ஐரோப்பா மற்றும் இதர நாடுகளின் தூதுவர்கள் வெளிநடப்பு செய்தனர்.

இதனையடுத்தே மேற்குலக நாடுகளுக்கும் அபிவிருத்தி அடைந்து வரும் இதர நாடுகளுக்குமிடையிலான பிரிவு கடந்த மாதம் வெளிப்படுத்தப்பட்டது. இலங்கை அரசு சீனா போன்ற சக்தி வாய்ந்த தனது புதிய நட்பு நாடுகளுடன் மேற்படி தீர்மானத்தை வெற்றி கண்டுள்ளது. (ஓ-6)

# ஹோண்டு ராஸ் நாட்டில் பயங்கர நில நடுக்கம்

## கட்டடம் இடிந்து 6 பேர் பலி; 50 பேர் காயம்

(தெகுகல்பா)

வட அமெரிக்கா, தென் அமெரிக்கா கண்டங்களுக்கு மத்தியில் உள்ள குட்டி நாடு ஹோண்டு ராஸ். இங்குள்ள ரோட்டன் தீவு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியில் உள்ளூர் நேரப்படி அதிகாலை 2.24 மணிக்கு பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டது. இதில் ஏராளமான கட்டடங்கள் இடிந்து விழுந்தன. மக்கள் அலறியடித்து வெளியே ஓடி வந்தனர்.

ஆனாலும் கட்டட இடிபாட்டுக்குள் ஏராளமானோர் சிக்கிக் கொண்டனர். அதில் 6 பேர் உயிரிழந்தனர். 50க்கும் மேற்பட்டோர் படுகாயடைந்தனர். இன்னும் ஏராள்மானோர் கட்டட இடிபாட்டுக்குள் சிக்கிக் கிடக்கின்றனர். எனவே பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகின்றது. இடிபாட்டுக்குள் சிக்கி கிடப்பவர்களை மீட்கும் பணி முழு வீச்சில் நடந்து வருகிறது.

60க்கும் மேற்பட்ட கட்டடங்களும் வீடுகளும் இடிந்து விழுந்திருப்பதாக முதல் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடலுக்கு அடியில் நில நடுக்கம் மையம் இருந்தது. ரிக்டர் ஸ்கேல் அளவுக்கு 7.1 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. இதனால் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது. ஆனால் சுனாமி ஏற்படவில்லை. (ஓ-6)

# இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்து இந்தியா மீண்டும் தவறிழைத்துள்ளது

## வைகோ குற்றச்சாட்டு



(சென்னை)

ஐ.நா. சபையில் நடந்த வாக்கெடுப்பில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்ததன் மூலம் இந்திய அரசு இப்போது மீண்டும் ஒரு தவறைச் செய்துள்ளது என்று ம.தி. மு.க. பொதுச் செயலாளர் வைகோ குற்றம் சாட்டியுள்ளார்.

நெல்லையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர்,

இலங்கையில் நடைபெற்ற துயரங்களுக்கு இந்திய அரசுதான் காரணம். துயரம் என்று நான் சொன்னதற்குக் காரணம் இலங்கைத் தமிழர்களை கருவறுக்கும் இந்த செயலுக்கு இந்த அரசு துணைபோகும் போது நாம் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருப்பதைத் தான் துயரம் என்றேன்.

இந்திய விடுதலைக்கு முதலில் போராடியது தென்னாடுதான். அந்த வீர சரித்திரம் இந்த மண்ணுக்கு உண்டு. அப்படிப்பட்ட இந்த மண்ணில் இன்று தமிழ் உணர்வு அழிக்கப்படுகிறது. ஈழத் தமிழர்கள் வரலாற்றில் இது ஒரு சிறிய இடைவெளி. நாடாளுமன்றத்தில் என் குரல் ஒலிக்காவிட்டாலும் மக்கள் மன்றத்தில் என் குரல் ஓங்கி ஒலிக்கும்.

இந்திய அரசு இப் போது மீண்டும் ஒரு தவறு செய்துள்ளது. ஐ.நா. சபையில்நடந்த வாக்கெடுப்பில் இலங் கைக்கு ஆதரவாக இந்தியா வாக்கு அளித்துள்ளது.

உலகில் யாருக்கும் ஏற்படாத கொடுமை தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இலங்கைக்கு இது தற்காலிக வெற்றிதான். அதுவும் இந்தியா உதவி செய்து ஆயுதங்களை, வீரர்களை அனுப்பியதால் கிடைத்த வெற்றி.

கடந்த 5 மாதத்தில் மட்டும் ஒரு இலட்சத்து 45 ஆயிரம் தமிழர்கள் அழிக்கப்பட்டுள்ளனர். மூன்றரை இலட்சம் தமிழர்கள் பாதுகாப்பு இல்லாமல் உள்ளனர். இது இந்திய அரசின் துரோகம்.

தேர்தலில் பணம் கொடுத்து வாக்குகளை வாங்கினார்கள். பணம் கொடுப்பதை யாரும் கண்டிக்கவில்லை. தோற்றுப்போன கவலை எனக்கு துளியும் கிடையாது. இதிலிருந்து தமிழகம் மீட்கப்பட வேண்டும். முத்துக்குமார் உட்பட 14 பேர் செய்த தியாகம் வீண்போகாது. தமிழகம் விரைவில் மீட்கப்படும் என்றார். (ஓ-6)

# பாகிஸ்தானில் மீண்டும் குண்டுவெடிப்பு

## 10 பேர் பலி; 40 பேர் காயம்



பாகிஸ்தான் லாகூர் நகரில் கடந்த புதன் கிழமை தீவிரவாதிகள் மனித குண்டு தாக்குதல் நடத்தினார்கள். இதில் 40 பேர் பலியானார் கள். 250க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந் தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம்இரவு மேலும் 2 இடங்களில் குண்டு வெடித்துள்ளது.

பெஷாவர் நகரில் மனித குண்டு தீவிரவாதி ஒருவன் அங்குள்ள இராணுவ சோதனை சாவடிக்குள் புகுந்து குண்டை வெடிக்கச் செய் தார். இதில் 4 வீரர்கள் உயிரிழந்தனர்.

இதே பகுதியில் 2 மோட்டார் சைக்கிளில் டைம் பாம் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டி ருந் ததைக் கண்டுபிடித்து இராணுவத்தினர் அகற்றினார்கள். பெஷாவரில் குண்டுவெடித்த சிறிது நேரத் தில் வடகிழக்கு பிராந்தியத்தில் உள்ள இஷமாவில்கான் என்ற இடத்தில் குண்டு வெடித்தது. அதில் 6 பேர் பலியானார்கள். 40 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளை இராணுவம் தாக்கி வருவதை அடுத்து அதற் குப் பதிலடியாக தலிபான்கள் வெடிகுண்டு தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

எனவே இந்த இரு தாக்குதல்களையும் அவர்கள் தான் நடத்தியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. (ஓ-6)

# உலக பொருளாதார நெருக்கடி காரணமாக மனித உரிமை மீறல்கள் மோசமடையும் ஆபத்து

## சர்வதேச மன்னிப்புச் சபை எச்சரிக்கை



சர்வதேச மன்னிப்புச் சபையின் பணிப்பாளர் நாயகம் ஐரின் கான்

உலக பொருளாதார நெருக்கடிகள் மனித உரிமைகள் மீறல்களை மிகவும் மோசமடையச் செய்து வருவதாக சர்வதேச மன்னிப்புச்சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. மேற்படி சபை தனது வருடாந்த அறிக்கை யிலேயே இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாதுகாப்பு, உலக பயங்கரவாதத்துக்கு எதிரான பதிலடி என்ற பெயரில் உலகெங்கும் மனித உரிமைகள் மீறப்பட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச்சபையின் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சந்தைப் பொருளாதாரம் தொடர்பான கட்டமைப்பு கொள்கைகள் செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்குமிடையிலான இடைவெளியை அகலப்படுத்தியுள்ளதுடன் உலகெங்கும் மில்லியன் கணக்கான மக்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவிக்கிறது.

பசி போஷாக்கின்மை மட்டங்கள் அதிகரித்து வருவதுடன் மக்களுக்கு அவர்களது அடிப்படைத்தேவைகள் நிறைவேற்ற மிகக் குறைந்தளவே பங்களிப்பு செய்யப்பட்டு வருவதாக அச் சபை குறிப்பிட்டுள்ளது.

ஆயுத மோதல்களை முடிவுக்குக் கொண்டு வந்து மனித உரிமைகள் தொடர்பில் அரசாங்கங்கள் கவனம் செலுத்தா விட்டால் பொருளா தார தீர்வொன்று ஒரு போதும் ஏற்படாது என சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த அறிக்கையானது உலகெங்குமுள்ள 157 நாடு களை உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ளது.

உலகின் பொருளாதார சக்திகள் முன்னுதாரணமாக மகிழ்வதுடன் மனித உரிமைகள் என்ற நேரம் பார்த்து வெடிக்கும் குண்டை செயலிழக்க வைக்கவும் வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை அழைப்பு விடுத்துள்ளது. (ஓ-6)

# துணை முதல்வரானார் ஸ்டாலின்



தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் ஸ்டாலின் துணை முதல்வராக பொறுப்பேற்க இருக்கிறார். தற்போதைய மத்திய அமைச்சரவையில் பங்கேற்பது தொடர்பாக தி.மு.கவுக்கும் காங்கிரசுக்கும் இடையே நில விய இழுபறி நிலையை முடிவுக்குக் கொண்டு வருவதில் ஸ்டாலின் பெரும் பங்காற்றி யுள்ளார்.

தி.மு.க வின் இளைஞர் அணிப்பிரிவுச் செயலாளராக நீண்ட காலம் பணியாற்றிய ஸ்டாலின் சமீபத்தில்தான் தி.மு.கவின் பொருளாளராக நியமிக்கப்பட்டார். முதல்வர் கருணாநிதி கவர்னர் பார்னாலாவிற்கு ஸ்டாலினை துணை முதல்வராக்க பரிந்துரை செய்தார். இதை ஏற்று கவர்னர் ஸ்டாலினை துணை முதல்வராக நியமனம் செய்துள்ளார்.

தற்போது உள்ளாட்சித் துறையை கவனித்து வரும் ஸ்டாலி னுக்கு வேறுசில துறைகளும் தரப் பட்டுள்ளன. தொழில்கள், பாஸ்போர்ட், டி.ஆர்.ஓ சிறுபான்மையினர் நலன், சமூக சீர்திருத்தம், பொது நிர்வாகம் போன்ற முக்கிய துறைகளும் வழங்கப்படவுள்ளது. இது தொடர்பாக முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தனது உடல் நிலை சரியில்லாததால் ஸ்டாலினுக்கு துணை முதல்வர் பதவியும் தன்னிடம் உள்ள சில துறைகளையும் கொடுத்துள்ளதாக கூறியுள்ளார். (ஓ-6)

# காஷ்மீர் மாணவிகளிடையே கராத்தே கற்கும் ஆர்வம் அதிகரிப்பு

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் மாநிலம் தீவிரவாதிகள் தாக்குதலில் பாதிக்கப்பட்டுள்ளது. குண்டுவெடிப்பு, வன்முறை போன்றவற்றால் அப்பாவி மக்கள் பலர் பலியாகிறார்கள். இது காஷ்மீர் மாநில பெண்களிடையே பெரும் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

அச்சத்தைப் போக்க காஷ்மீர் பெண்களுக்கு கராத்தே கற்றுத் தரப்படுகிறது. ஸ்ரீநகரில் பிளஸ் -1 படிக்கும் மாணவிகள் 50க்கும் மேற்பட்டோர் அங்குள்ள கராத்தே பள்ளிக்குச் சென்று கராத்தே கற்கிறார்கள்.

அவர்கள் தவறாது தினமும் கராத்தே கற்று வருகிறார்கள். கராத்தே கற்பது மன தைரியத்தை வளர்ப்பதுடன் "ஈவ்டிவ் சிங்" மற்றும் பொது இடத்தில் மற்றவர்களிடம் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள உதவுவதாக மாணவிகள் தெரிவித்தனர்.

காஷ்மீரில் பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரித்து வருவதாக புள்ளிவிபரங்கள் வெளியானது. குறிப்பாக கல்லூரி மாணவிகள், பள்ளி மாணவிகள் மீதான துன்புறுத்தல்கள் அதிகரித்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் பெண்களுக்கு எதிரான கொடுமை 80 சதவீதம் அதிகரித்துள்ளது. எனவே தற்காப்புக்காக பெண்கள் கராத்தே கற்பது அவசியம் என்று சமூக ஆர்வலர் முசாபர் அகமது கூறியுள்ளார்.

ஸ்ரீநகரில் 30க்கு மேற்பட்ட பெண்கள் பள்ளிகளில் கராத்தே கற்றுத்தரப்படுகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் 50மாணவிகள் வரை கராத்தே கற்கிறார்கள்.

ஸ்ரீநகரில் சில நாட்களுக்கு முன் ரோமனா என்ற 16 வயது இளம்பெண் ஈவ்டிவ் சிங்குக்கு பலியானார். 2 இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து ரோமனா மீது மோதினார்கள். இதில் படுகாயம் அடைந்து ரோமனா பலியானாள். இது தொடர்பாக 2 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த சம்பவம் ஸ்ரீநகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து மாணவிகளிடையே கராத்தே கற்கும் ஆர்வம் அதிகரித்துள்ளது. (ஓ-6)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

8-V

### நாய்க்குத் தெரிந்தது நமக்கு தெரியவில்லையே!

நன்றியுள்ள நாய்க்கு நம்மைவிட நல்லது பல தெரியும். இதைச் சொல்லும் போது எம்மில் பலருக்கு 'சுருக்'கென்று தைக்கும். 'கண்டது கடியது' என பலதும் பத்தும் உணவாகக் கொள்ளும் திருவாளர் 'நாயார்' அவ்வப்போது உண்ணாவிரதம் (Fasting) இருப்பதுண்டு. சமிபாட்டுத் தொகுதியில் ஏற்படும் அஜீரணமுட்பட உபாதைகளை சரிசெய்ய அன்று மட்டும் உண்ணாவிரதமிருந்து அறுகம்புல் சாப்பிடுவதனை அவதானியுங்கள்.

எது கொடுத்தாலும் திரும்பிப் பாராது 'அறுகம்புல்' கடித்து தனது உபாதைகளை தீர்த்துக் கொள்ளும். இந்த ஐந்தறிவு பிராணியினுடைய பட்டறிவு கூட ஆறறிவுள்ள எமக்கு இல்லையே. நாய் வளர்க்கும் ஒவ்வொருவரும் உங்களது வீட்டில் தோட்டத்தில் 'அறுகம்புல்' வளர்த்து விடுங்கள்.

அதுபோல பூனைக்கு அஜீரணமேற்பட்டால் குப்பை மேனியை கடித்துண்பதை அவதானியுங்கள். குப்பை மேனியிலும் அதீத மருத்துவ குணங்களுண்டு.

பல்வேறுபட்ட உடல் உபாதைகளிலிருந்து மீள்வதற்கு 'அறுகம்புல் சாறு' உதவுவதாக இதனை தொடர்ச்சியாக பயன்படுத்துபவர்களும் சுதேச வைத்தியர்களும் தெரிவித்துள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது.

வேளாண் செய்கையில் வெறுமனே உணவுக்காக பயிர்களை உற்பத்தி செய்தல் என்ற காலம் மாறி பயிர்களை விளைவித்தல் என்ற காலம் கனிந்து கொண்டிருக்கின்றது. உணவுக்கான பயிர் வகைகளுடன் மூலிகைப் பயிர்களையும் இணைத்து உற்பத்தி செய்தால் குறிப்பிட்ட நிலத்திலிருந்து அதியுச்ச பயன்பாட்டை, ஆதாயத்தை பெறக் கூடியதாயிருக்கும். ஒரு வகையில் பயிர் +களையிலிருந்து வருமானத்தைப் பெறமுடிவதுடன் இன்னொரு வகையில் பயிரில் சேதத்தை ஏற்படுத்தும் பீடைகளை கட்டுப்படுத்தவும் உதவியாயிருக்கும்.

'அறுகம்புல்' மாலை விநாயகப் பெருமானின் விருப்புக்குரிய பொருளாக இருப்பதனால் இந்து ஆலயங்களில் பயன்படுத்துவதற்கும் அறுகம்புல் பயிர்ச் செய்கை செய்யப்படுகின்றது. இதனால் 'அறுகம்புல்' விற்பனைக்குரிய பொருளாக ஆகிவிட்டது.

வெறுமனே சாணத்தை ஒரு பிடி பிடித்து வைத்தால் அதற்கு மதிப்பு ஏது? அதனை தட்டி காயவைத்தால் 'வரட்டி' யாகி எரிக்க




பயன்படுகிறது. எரித்து சாம்பல் ஆக்கினால் 'திருநீறு' ஆகிறது. ஆனால் பிடித்த ஒரு பிடி சாணத்தின் மேல் அறுகம்புல்லை குத்தி விட்டால் வணக்கதிற்குரியதாகி எம்பெருமான் விநாயகப் பெருமானை உருவகப்படுத்தி விடுகிறது.

அறுகம் புல்லிற்கு அவ்வளவு மகிமை, சக்தி. இதனையே மாணிக்க வாசக பெருமான் சிவபுராணத்தில் (அறுகம்) புல்லாகி, பூண்டாகி, புழுவாகி, மரமாகி ... என்றுரைத்து இறுதியில் இத்தாவர சங்கமத்துள் என அடக்கி விட்டார். இனியொரு பசுமைப் புரட்சி இவையனைத்தையும் கவனத்திற் கொள்ள வேண்டுமல்லவா?

### கோரைக் கிழங்கு

ஒருவித்திலை களைகளில் விவசாயிகள் இன்றுவரை மல்லுக்கட்டும் தாவரமாக முன்னிலைப்படுத்துப்படுவது 'கோரை' ஆகும். மணிக்கோரை, முடிச்சுக் கோரை, மும்மூட்டுக் கோரை என பலவாக விளைநிலத்திலே பயிருடன் போட்டி போடும் அனைத்து கோரை வகைகளும் அவசியம் கட்டுப்படுத்த வேண்டிய களையாகவே குறிப்பிடப்படுகின்றது. ஒரு பக்கத்தில் இவற்றினால் உற்பத்தி செய்யப்படுகின்ற அளவுக்கதிகமான விதைகள் இவற்றின் பரம்பலை நீரோட்டத்துடன் சென்று அதிகரித்து விடுகின்றது.

இலகுவில் பரம்பலடையக்கூடியதான இவ்வகை களைகளின் உருவ மற்றும் இனப்பெருக்க இயல்புகள் இவற்றினை கட்டுப்படுத்துவதில் சிரமத்தை கொடுப்பனவாகவுள்ளன.

கோரைத் தாவரத்தில் உள்ள நிலக்கீழான கிழங்கு இதனைக் கட்டுப்படுத்துவதில் பிரச்சினைக்குரிய தொன்றாகும். மண்ணினுள்ளே இலகுவில் பிரித்தெடுக்க முடியாதளவிற்கு கிளை பரப்பி இதனது வேர் ஆழ அகல பரவியிருப்பதும், அதிக எண்ணிக்கையான கிழங்குகளை வலையமைப்பாக உருவாகியிருப்பதுவுமே இதற்கான காரணமாகும்.

மேட்டுநிலம், நெல் வயல் காணி என அனைத்து விளை நிலத்திலும் முதன்மை களையாக உருவெடுத்துள்ள 'கோரை' களையை இன்றுவரை முழுமையாக அழிக்க முடிவதில்லை.

ஆடி உழவு சிறப்பாக செய்யப்படும் போது கிழங்குகளுடன் இக்களைத் தாவரத்தை அகற்றி வரப்பிலே போட்டு விடுவார்கள். இதனை எரித்து அகற்றுதல் சிறந்த முறையென்றாலும் சுதேச மருத்துவர்களுக்கு இவ்வாறு இக் கோரைக் கிழங்குகளை எரிப்பது கசப்பானதாக இருக்கும். தூய்மையான கோரைக் கிழங்குகளை தங்களது மூலிகை மருந்தில் பயன்படுத்தும் சித்த ஆயுர்வேத மருத்துவர்களுக்கு இவற்றை சேகரித்துக் கொடுக்கலாம்.

ஒரு பக்கத்தில் பிரச்சினைக்குரியதாக இருக்கும் கோரைக் கிழங்குகள் இன்னொரு பக்கத்தில் அவசியம் தேவைப்படும். அதுவும் மருத்துவத்திற்கு தேவைப்படும் பொருளாகின்றது.

இதனாலேயே விவசாயமும் மருத்துவமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாகின்றன. நாணயத்தின் பெறுமதியில் இரண்டினது பங்களிப்பும் இருப்பதனையே இது காட்டுகின்றது. ஒன்றிலிருந்து இன்னொன்றை பிரிக்க முடியாது.

சிறந்த மூலிகைக்கான கேள்வி அதிகரிக்கும் போது 'கோரைக்' களையும் 'பயிர்' ஆவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். சுதேச வைத்தியத்தின் அபிவிரு



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

த்தியில் இவையனைத்தும் தங்கியிருக்கின்ற நிலையில் இன்னொரு பசுமைப் புரட்சியில் வெறுமனே உணவுக்கான பயிர்ச்செய்கை என்ற தொனிப் பொருளை சற்று மாற்றி காலத்தின் தேவைக் கேற்ப 'உணவுக்கும் மருத்துவத்திற்குமான பயிர்ச்செய்கை அல்லது வேளாண்மை' என அனைவருக்கும் உணர்த்த வேண்டும். இனி வரும் பசுமைப் புரட்சி நாணயத்தின் இரு பக்கங்களுக்கும் சமனான வாய்ப்பை வழங்க வேண்டும்.

உணவே மருந்தாக மருந்தே உணவாக நாமனைவரும் உணர்ந்தால் இதை வேத வாக்காக கூறிவைத்த எமது முன்னோர்களும் சித்தர்களும் அவர்கள் அனுபவித்து எழுதிவைத்ததை பயனுள்ளதாக்கினால் அனைவரும் நோய் நொடியின்றி நீடு வாழ வழி பிறக்கும்.

களை என்று களைந்தெறிய வேண்டியிருந்தால் அதற்கான கட்டுப்பாடு மிகவும் அவசியம். அதே நேரத்தில் 'களை' யினை பயிராக, வேறு தேவைக்கென பயன்படுத்தும் போது பயனுள்ளதாகின்றது.

(தொடரும்)

# இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தில் 20 ஆயிரம் தமிழர்கள் படுகொலை

## த டைம்ஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் இறுதிக்கட்ட யுத்தத்தில் 20 ஆயிரம் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்திருப்பதாக த டைம்ஸ் குற்றம் சுமத்தியுள்ளது. அரசாங்கம் மேற்கொண்ட எறிகணை வீச்சுக்களால் அவர்கள் கொல்லப்பட்டதாக த டைம்ஸ் மேற்கொண்ட அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அறிவிக்கப்பட்டதை விட மூன்று மடங்கு அதிகம் என டைம்ஸ் தெரிவித்துள்ளது.

மோதல் தவிர்ப்பு வலயத்தில் இலட்சக்கணக்கான பொதுமக்கள் இருந்த நிலையில் கடந்த ஏப்ரல் 27 ஆம் திகதி கனரக ஆயுதங்களை பாவிப்பதை நிறுத்துவதாக அரசாங்கம் அறிவித்தது.

அத்துடன் அங்கு இடம்பெற்ற பொது மக்களின் உயிரிழப்புகளை, விடுதலைப்புலிகளின் மீது அரசாங்கம் சுமத்தியதாக டைம்ஸ் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், கிடைக்கப்பட்ட நிழற்படங்கள், உத்தியோகபூர்வ ஆவணங்கள், சாட்சியாளர்கள் மற்றும் நிபுணர்களின் கருத்துக்கள் என்பன மாறுபட்ட கதைகளை சொல்வதாக அது தெரிவித்துள்ளது.

சர்வதேச கண்காணிப்பாளர்களும், உதவி வழங்குனர்களும், ஊடகவியலாளர்களும் புறந்தள்ளப்பட்டு, இராணுவம் இறுதி மூன்று வாரங்கள் பாரிய தாக்குதல்களை முன்னெடுத்து யுத்தம் நிறைவடைந்து விட்டதாக அறிவித்தது.

ஆனால் அதற்கான விலைகளை அப்பாவி தமிழ் பொது மக்களே செலுத்த வேண்டியேற்பட்டதாக த டைம்ஸின் அந்த செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கிடையில் விடு தலைப்புலிகளின் தலைவர் கொல்லப்பட்டதன் பின்னர், மே 19 ஆம் திகதி மாத்திரம் ஆயிரம் பொது மக்கள் கொல்லப்படடதாகவும் த டைம்ஸ் தெரிவித்துள்ளது.

இந்த பாதிப்புக்களை தற்போது வெளியாகியுள்ள நிழற்படங்களின் ஊடாக பார்க்கும் போது தெளிவுபடுத்தப்படுகிறது.

இதற்கிடையில் தாக்குதல் கோணங்கள் இராணுவத்தினரால் நிர்ணயிக்கப்பட்டு அதன் பின்னர் வான் மற்றும் நிலத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை சில புகைப் படங்களில் தெளிவாக தெரிவதாக பிரித்தானிய ஆயுதப்படை என்னும் சஞ்சிகையின் ஆசிரியர் சார்ல்ஷ் ஹெயின்மென் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில் இலங்கையின் பிரேரணை வெற்றி பெற்றுள்ளது. (ஓ-6)

## ஈரான் உதவியுடன் ஆயிரம் கிராமங்களுக்கு மின்சாரம்

(கொழும்பு)

ஈரான் உதவியுடன் 8 ஆவது கிராமிய மின்சார அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப் படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதற்கான பிரேரணையை மின் சக்தி எரிசக்தி அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன முன்வைத்திருந்தார்.

இத்திட்டத்துக்கு 106.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்படவுள்ளது. இத் திட்டத்தின் மூலம் ஆயிரம் கிராமங்களுக்கு மின்சார வசதி வழங்கப்படும்.

அத்துடன் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் புதிய பாவனையாளர்கள் உள்வாங்கப் படுவர். (ஓ-6)



நீர்வேலி அணியப் பாடசாலைகளின் அனுசரணையுடன் வெளியிட்டு வைக்கப்பட்ட ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான பிரசினங்கள் தீர்த்தல் தொடர்பான இறுவட்டு வெளியீட்டு விழாவின் போது கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம், யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணி மற்றும் அதிபர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# நலன்புரி நிலையங்களில் 5 அரச மருந்தகங்களை அமைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்களின் சுகாதார மேம்பாட்டுக்காக நலன்புரி நிலையங்களில் உடனடியாக ஐந்து அரசாங்க ஒசுசல மருந்தகங்கள் அமைக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைப்படி சுகாதார பராமரிப்பு போஷாக்குத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இந்த ஒசுசல மருந்தகங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

குறிப்பிட்ட ஐந்து மருந்தகங்களையும் நலன்புரி நிலையங்கள் அமையப் பெற்றிருக்கும் ஐந்து வலயங்களில் அடுத்துவரும் இரு வாரங்களுக்குள் ஸ்தாபிக்குமாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அரசாங்க மருந்தாக்கட் கூட்டுத்தாபனத் தலைவருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதேவேளை செட்டிகுளம் பிரதேசத்தில் மருந்துப் பொருள் களஞ்சியசாலையொன்றை அமைப்பதற்கும் அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

(ஓ-6)

சாக்கடை நீரில் குப்பையைக் காண்பதா? அல்லது வானத்தைக் காண்பதா? உன் இஷ்டம்.

– ரஸ்கின்

வலம்புரி

## இளைஞர்களை வழிப்படுத்தும் தார்மீகப் பொறுப்பு சமயங்களுக்கு உண்டு

நவீன தகவல் தொழில்நுட்பம் –கையடக்கத் தொலைபேசிகளின் பயன்பாடு என்பன இளம் சமூகத்தை நெறிபிறழ்வான வழிக்கு இட்டுச் செல்கின்றது.

இவற்றின் தாக்கம் எப்படியும் வாழலாம் என்ற மேற்குலக நாடுகளுக்குத் தீங்கில்லையாயினும் எமது நாடுகளில் இவை சகிக்க முடியாதவையாகும்.

அதிலும் இறுக்கமான பண்பாட்டுக் கோலங்களைக் கொண்ட யாழ்ப்பாணத்தில் நவீன தகவல் தொழில் நுட்பம் கவலை தரும் விடயமாகவே அமைந்துள்ளது.

குறிப்பாக கையடக்கத் தொலைபேசிகளின் ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டுள்ள இளைஞர், யுவதிகள் மற்றும் மாணவர்களின் எதிர்காலம் எப்படி அமையும் என்ற ஏக்கம் எங்கள் எல்லோரிடமும் உண்டு.

மாணவர்கள் காரணமின்றி கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துகின்றனர்.

மாணவர்கள் என்ன தேவை கொண்டு கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துகின்றனர் என ஆய்வு செய்யும் சந்தர்ப்பத்தில் மிக மோசமான முடிவுகளையே கண்டறியமுடியும்.

இத்தகைய எங்கள் பண்பாட்டுக் கோலங்களை மீறுகின்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்தத் தவறுகின்ற பட்சத்தில் நாம் உயர் பண்பாட்டின் சொந்தக்காரர்கள் என்று உரிமை கொண்டாட முடியாமல் போகும்.

எனவே எங்கள் இளம் சமூகத்திடம் தொற்றியுள்ள கலாசார மீறல் நோயை குணப்படுத்துவதில் சமய அமைப்புகள் முக்கிய பங்காற்ற முடியும்.

இறை நம்பிக்கை, பெரியவர்களை மதிக்கும் பக்குவம், பெற்றோரை வணங்கும் நடைமுறை என்பவற்றை சமய நிறுவனங்களாலேயே ஆற்ற முடியும்.

இந்தப் பணியை சமய அமைப்புகள் செய்யத் தவறுகின்ற நிலையில், இறைவழிபாடே இளம் சந்ததியிடம் இருந்து முதலில் விடைபெற்றுக் கொள்ளும்.

மனித வாழ்க்கை அர்த்தமுடையதாக– மேன்மையுடையதாக இருக்க வேண்டுமாயின், இறை நம்பிக்கைகளும், சமய அனுட்டானங்களை கடைப்பிடிப்பதும் கட்டாயமானதாகும்.

பாவம்,புண்ணியம் என்ற இரு நிலை எண்ணக்கரு மூலமாக மனிதம் கட்டுப்படுத்தப்படுகிறது.

பாவ, புண்ணியக் கருத்துக்கள் இறை நம்பிக்கையோடு இரண்டறக் கலந்தவை.

எனவே இறை நம்பிக்கை ஊற்றெடுக்கும் போது அந்த ஊற்றில் எங்கள் பண்பாட்டுக் கோலங்களும் துளிர்விட்டு விருட்சமாகும்.

ஆக, சமகாலத்தில் இளம் சமூகத்திடம் வேகமாகப் பரவி வரும் கலாசாரப் பிறழ்வுகளை தடுத்து நிறுத்த சகல சமய அமைப்புகளும் முன் வரவேண்டும்.

# ஐ.நா.மனித உரிமை சபையில் இலங்கையின் பிரேரணை வெற்றி பெற்றுள்ளமை வெட்கக்கேடான செயல்

## சர்வதேச சட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர் பொய்லே தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை முன்வைத்த பிரேரணை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில் வெற்றி பெற்றுள்ளமை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட வெட்கக்கேடான, நோக்கமற்ற செயற்பாடு என சர்வதேச சட்ட பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் பிரான்சிஸ் பொய்லே தெரிவித்துள்ளார்.

இது, நாசி படையினரின் இனப்படுகொலையை ஏற்றுக் கொண்டமைக்கு ஒப்பான செயல் என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இந்த பிரேரணையை ஏற்றுக்கொண்டு வெற்றி பெற செய்துள்ளமை, இலங்கையின் இனப்படுகொலையை மறைத்து, அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கியதுடன் மனிதாபிமானத்துக்கு எதிராக தமிழர்களை கொன்று குவித்த போர்க் குற்றங்களையும் அங்கீகரித்து, இலங்கைக்கும் மற்றைய சர்வதேச நாடுகளுக்கும் இவ்வாறான இனவெறி செயல்களுக்கு அங்கீகாரம் வழங்கி பச்சைக் கொடி காட்டியதாக அமைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் சபையின் அங்கத்துவ நாடுகள் உண்மைக்கு புறம்பான போலித்தன்மையை ஆதரித்து இலங்கை அரசாங்கத்தின் ,மனிதாபிமானத்துக்கு எதிரான யுத்தத்திற்கும், போர் குற்றங்களுக்கும் ஊக்குவிப்பு வழங்கியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் குற்றங்களுக்கு மனித உரிமைகள் சபையின் அங்கத்துவ நாடுகள் சிலவும் கூட்டிணைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமைகள் சபையின் நாடுகளின் இந்த செயற்பாட்டை கண்டித்துள்ள சர்வதேச சட்ட பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் பிரான்சிஸ் பொய்லே வரலாறு அவர்களுக்கான தீர்ப்பினை வழங்கும் என தெரிவித்துள்ளார். (ஓ-6)

# நலன்புரி நிலையங்களிலுள்ள முதியவர்களின் பெயர்களைப் பார்வைக்கு வைக்க நடவடிக்கை

## வவுனியா மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியா நலன்புரி நிலையங்களிலுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் பெயர் விபரங்களைப் பார்வைக்கு வைக்கத் தீர்மானித்திருப்பதான வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

அவ்வாறு பெயர் விபரங்களைப் பார்வைக்கு வைத்தால் முகாம்களுக்கு வெளியிலிருக்கும் உறவினர்கள் முதியவர்களை அழைத்துச் செல்வதற்கு ஏதுவாக இருக்குமென அவர் கூறினார்.

நலன்புரி நிலையங்களிலிருக்கும் 60 வயதுக்கும் மேற்பட்ட முதியவர்களை வெளியேற அனுமதிக்க மாவட்ட செயலகமும் மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சும் தீர்மானித்தன.

இதற்கமையவே ஒவ்வொரு முகாம்களிலும் முதியவர்களின் பெயர் விபரங்களை பார்வைக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் அதன்பின்னர் வெளியிலிருக்கும் உறவினர்கள் விண்ணப்பித்து முதியவர்களை முகாம்களிலிருந்து அழைத்துச் செல்ல முடியுமெனவும் வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்தள்ளார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த இரண்டு இலட்சத்து 62 ஆயிரம் பேர் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடட சார்ள்ஸ் இவ்வாறு தங்கவைக்கப்பட்டிருப்பவர்களுக்கு உணவு, மருந்துப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களையும், சுகாதாரம் உள்ளிட்ட சேவைகளையும் அரசாங்கம் வழங்கி வருவதாகவும் குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானவர்கள் நீண்ட காலமாக பதுங்கு குழிகளில் வாழ்ந்து வந்ததால் அவர்கள் தோல் நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் சுகாதார அதிகாரிகள் அதற்கான சிகிச்சை அளித்து வருவதாகவும் வவுனியா அரசாங்க அதிபர் கூறியுள்ளார். (ஓ-6)

# விடுதலைப்புலிகளின் விமானங்கள் மூலம் நாம் பெரும் பிரச்சினைகளை சந்தித்தோம்

## விமானப்படைத் தளபதி ரொஷான் குணதிலக கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் விமானங்கள் மூலம் நாம் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கினோம். அதேபோன்று படிப்பினையையும் பெற்றுக் கொண்டோம் என்று விமானப்படையின் தளபதி ஏயார்.சீவ்.மார்சல் ரொஷான் குணதிலக தெரிவித்தார்.

புலிகளுடனான மோதலில் 506 விமானப் படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 353 பேர் காயமடைந்துள்ளனர் என்று அவர் மேலும் கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

விமானப்படையினர் பாதுகாப்பு வலயத்தின் மீது கொத்தணிக் குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தியதாக பலதரப்பினர் கருத்துக்களை வெளியிட்டனர். உண்மையில் அவ்வாறான குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தவில்லை. அதற்கான அவசியமும் எமக்கு இல்லை. நாம் சாதாரண குண்டுகளைப் பயன்படுத்தியே தாக்குதல்களை நடத்தினோம். அதற்கான ஆதாரங்களும் எம்மிடம் உள்ளன.

இதேவேளை விடுதலைப் புலிகளிடம் விமான ஓடுபாதை இருப்பதை நாம் அவதானித்தோம். அதன் பின்னரே வான் பாதுகாப்பு வலயமொன்றை அமைக்கத் தீர்மானித்தோம். அதன்மூலம் அவர்களின் செயற்பாடுகளை அவதானிக்க முடியும் என்பதை உணர்ந்தோம். உண்மையில் இவ்வாறான வலயமொன்றினை அமைக்க சுமார் 5 வருடங்களாவது தேவைப்படும் அத்துடன் அங்கு பொருத்தப்படும் ராடர் கருவிகளை இயக்குவதற்கு தகுந்த அதிகாரிகள் தேவை.

ஆனால் எம்மிடம் அந்த வசதிகள் இருக்கவில்லை. இருப்பினும் எமது தேவை கருதி குறுகிய காலப் பகுதிக்குள் அவற்றை அமைத்துக் கொண்டோம். விடுதலைப் புலிகள் வசமிருந்த விமானங்கள் அளவில் மிகச் சிறியவை. அவை இரவு வேளைகளிலேயே பயணிக்கும். எமது ராடர் கருவிகளுக்கு அவை அகப்படவும் மாட்டாது. விமானப் படையினர் வசமிருந்த விமான ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணைகள் மூலம் அவற்றைத் தாக்கி அழிக்க முடியாது. இதனால் அந்த விமானங்கள் தொடர்பில் நாம் பிரச்சினைகளை எதிர்நோக்கினோம். இறுதியில் அவற்றை சுட்டு வீழ்த்தினோம். அவர்களுடைய விமானங்கள் மூலம் நாம் பெரும் பிரச்சினைகளைச் சந்தித்தோம். அதே போன்று நிறையப் படிப்பினையும் பெற்றுக் கொண்டோம். நாம் மட்டுமன்றி உலக நாடுகள் அனைத்தும் இதன் மூலம் பெரும் படிப்பினையைப் பெற்றுக் கொண்டிருப்பர்.

விடுதலைப் புலிகளிடம் 5 இலகு ரக விமானங்கள் இருந்தன. அவற்றை விமானப் படையினர் அழித்தனர். மேலும் 3 விமானங்களைக் கொள்வனவு செய்து அவற்றை வன்னிக்கு கப்பல்கள் மூலம் கொண்டு செல்ல முட்பட்ட போது கடற்படையினரின் தாக்குதல்களுக்கு இலக்காகி அக்கப்பல்கள் அழிக்கப்பட்டன. அவ்வியக்கத்தினரிடமிருந்த விமானங்கள் அனைத்தும் செக்கோசிலோவாக்கியாவில் தயாரிக்கப்பட்டவையாகும். இவை 3 ஆம் தரப்பினராலேயே கொள்வனவு செய்யப்பட்டிருந்ததாக தெரியவந்தது.

இதேவேளை, விடுதலைப் புலிகளுடனான மோதல்களின் போது விமானப் படையைச் சேர்ந்த 38 விமானிகள், 35 அதிகாரிகள், 430 விமானப்படை வீரர்கள் உட்பட 506 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் அதிகாரிகள் உட்பட 353 பேர் காயமடைந்துள்ளனர் என்றார். (ஓ-6)

## சுவாமி விவேகானந்தரின் வீரமுரசு

### தன்னடக்கம்



காம எண்ணமும் காமச் செயலைப் போன்று தீயதாகும். ஆசையை அடக்குவதே மிகச் சிறந்த பயனை விளைவிக்கும். நல்லனவோ, தீயனவோ உனது செயல்களை உமிழ்ந்தபின், மீண்டும் அவற்றை ஒருபோதும் நினைக்காதே. செய்தது செய்தாயிற்று ; மூட நம்பிக்கையைத் தூர எறி. மரணமே எதிர். வந்தாலும் பலவீனத்திற்கு இடங் கொடுக்காதே. கழிந்ததை எண்ணிக் கலங்காதே, சென்றதைக் குறித்துச் சிந்திக்காதே ; உன் நற்செயல்களையும் நினைவில் வைக்காதே ; கட்டற்று நில்.

உலகம் வேண்டுவது ஒழுக்கமே. கொழுந்து விட்டெரியும் அன்பு, தன்னலமற்ற அன்பு யாரிடம் இருக்குமோ, அவரையே உலகம் வேண்டி நிற்கின்றது. அத்தகைய அன்பே, வாயிலிருந்து எழும் வார்த்தை ஒவ்வொன்றையும் மிகச்சிற பயனுள்ளதாக்கும்.

# வடக்கு மக்களின் சொத்தான கல்வி அபிவிருத்திக்கு முன்னுரிமை தேவை

## அமைச்சர் டாக்டர் ராஜிதசேனாரட்ண தெரிவிப்பு

வடக்கு முழுவதும் தரமான பாடசாலைகள் உருவாக்கப்பட வேண்டும். தற்போதைய நிலைமையில் வசதிகளற்ற நிலையில் இயங்குகின்ற பாடசாலைகள் தரமுயர்த்தப்படுவதுடன் பாடசாலைகளின் குறைபாடுகள் தீர்க்கப்படவேண்டும். தேசிய கல்லூரிகளுக்கு வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டியது தற்போதைய அவசியமாகவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விருத்தி செய்யப்பட்டு அங்கு தற்போது இல்லாத பீடங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று நிர்மாணம் மற்றும் பொறியியல் துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

மக்கள் சகல வசதிகளுடனும் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும். மீட்கப்பட்ட பிரதேசங்களில் வீடுகள் அமைக்கப்பட வேண்டும். வீதிகள், மின்சார வசதி மற்றும் நீர் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் கோவில்கள் என்பன மீள அமைக்கப்படவேண்டும்.

படித்த இளைஞர், யுவதிகளுக்கு உரிய தொழில்கள் வழங்குவது கட்டாயமாகும். தற்போது தமிழ் இளைஞர்களை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. தகுதியுள்ளவர்களுக்கு நிச்சயம் வாய்ப்புக் கிடைக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

**இவ் வருடத்துக்குள் 80 வீதமான மக்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும்**

இடம்பெயர்ந்துள்ள மக்களில் 80 வீதமானோரை இவ்வருட இறுதிக்குள் மீளக்குடியமர்த்தப்பட முடியுமானால் சிறப்பாக அமையும். அதற்கு முதலில் மீட்கப்பட்ட பிரதேசங்களில் நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் பின்னர் மக்கள் சகல வசதிகளுடனும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். மீட்கப்பட்ட பிரதேசங்களில் வீடுகள் அமைக்கப்பட வேண்டும். வீதிகள், மின்சார வசதி மற்றும் நீர் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் கோவில்கள்




என்பன மீள அமைக்கப்பட வேண்டும். ஏற்கனவே கிழக்கு மாகாணத்திற்கு இவ்வாறு வேலைத் திட்டங்களை மேற்கொண்ட அனுபவம் அரசாங்கத்துக்கு இருக்கின்றது. எனவே இது எமக்கு பாரிய சவாலான விடயமாக அமையாது.

மீள்குடியேற்ற வேலைத்திட்டத்தில் எனது விடயதானத்துக்கு உட்பட்ட நிர்மாண மற்றும் பொறியியல் துறை அமைச்சின் ஊடாக பல்வேறு நிர்மாண பணிகள் மேற்கொள்ள நேரிடும். பாரிய பங்களிப்பை நாங்கள் செலுத்த வேண்டிவரும். எமது அமைச்சுக்கான கோரிக்கைகள் இதுவரை விடுக்கப்படவில்லை. நாங்கள் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கத் தயாராகவே இருக்கின்றோம். அறிவித்தல்கள் வரும்வரை காத்திருக்கின்றோம்.

**விவசாயத்துக்கு என்ன தேவை?**

வடக்கு பகுதியில் மீண்டும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயின் அங்கு நீர்ப்பாசன வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். வடக்கு பகுதி உலர் வலயமாகும். எனவே அங்கு குழாய் நீர்த் திட்டம் ஒன்றாவது மேற்கொள் ளப்பட வேண்டியது அவசியமாகும். சம்பந்தப்பட்ட துறைகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் என நம்புகின்றேன்.

**தொழில் வாய்ப்புக்களை எவ்வாறு பெறுவது?**

தற்போதைய நிலைமையில் தொழில் வாய்ப்புகள் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். படித்த இளைஞர், யுவதிகளுக்கு உரிய தொழில்கள் வழங்கப்பட வேண்டும்.

தற்போது தமிழ் இளைஞர்களை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின் றது. தகுதியுள்ளவர்களுக்கு நிச்சயம் வாய்ப் புக் கிடைக்கும். பரந்தன் தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பித்தால் 4000 பேருக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும். இவ்வாறு பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு தொழில்வாய்ப்புக்களை அதிகரிக்க வேண் டும். மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டியது அவசியமாகும்.

**கல்வி வடக்கின் சொத்து**

வடக்கு மக்களின் முக்கிய சொத்தாக வரலாற்றிலிருந்து காணப்படுவது கல்வியாகும். அந்த மக்கள் எந்த விதமான பிரச்சினைகளுக்கு மத்தியிலும் கல்வியை கைவிடவில்லை.

எனவே அதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும். வடக்கு முழுவதும் தரமான பாடசாலைகள் உருவாக்கப்பட வேண்டும். தற்போதைய பாடசாலைகள் தரமுயர்த்தப்படவேண்டும். பாடசாலைகளின் குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டும். கல்லூரிகளுக்கு வசதிகள் செய்துகொடுக்கப்படுவதுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விருத்தி செய்யப்பட வேண்டும். அங்கு தற்போது இல்லாத பீடங்கள் உருவாக்கப்படுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அவசியமாகும்.

வடக்கு கல்வித்துறை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை இனம்கண்டு அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வடக்கு மக்களின் பாரிய சொத் தான கல்வி அவர்களுக்கு குறை வில்லாமல் வழங்கப்பட வேண்டும் என்றார். (ஓ-6)

**ஊர்காவற்றுறை பிரதேசசபை, ஊர்காவற்றுறை**

**கேள்வி அறிவித்தல் -2009**

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் 12.06.2009 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அதே தினம் முற்பகல் 11 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும். இவ் வேலைகளுக்கு வேண்டப்படுகின்ற நிர்மாணப் பயிற்சி நிலைய (இக்ராட்) தரத்தில் உள்ள பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் /சமூக மட்ட நிறுவனங்கள் மாத்திரமே கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகைமையுடையவராவார்கள்.

| | வேலையின் பெயர் | வேண்டப்படும் “இக்ராட்” தரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணம்(வற்வரி உள்ளடங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | ஊர்காவற்றுறை பிரதேசசபை தலைமை அலுவலகம் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணிக்கு எல்லை மதில் அமைத்தல் | M-9 | 9,230.00 | 560.00 |
| 2 | ஊர்காவற்றுறை நகர கடைத் தொகுதி திருத்தம் மற்றும் மலசலகூடம் நிர்மாணித்தல் | M-9 | 8,950.00 | 560.00 |
| 3 | ஊர்காவற்றுறை உப்புகுள வீதி புனரமைத்தல் | M-9 | 6,000.00 | 560.00 |
| 4 | ஊர்காவற்றுறை நகர கடைத்தொகு திக்கு இரும்பு கேற் பொருத்துதல் | M-10 | 3,650.00 | 560.00 |
| 5 | ஊர்காவற்றுறை மண்குழி பொதுக் கிணறு புனரமைத்தல் | M-10 | 950.00 | 560.00 |

கேள்விப் பத்திரங்களை ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலகத்தில் 01.06.2009 ஆம் திகதி தொடக்கம் மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்வி படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை ***செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேசசபை*** என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை ***பிரா. உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்*** என்ற முகவரிக்கும் 12.06.2009 ஆம் திகதி 10 மணிக்கு முன்னராக நேரடியாகவோ/ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இதுதொடர்பான மேலதிக விபரங்களை ஊர்காவற்றுறை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

29.05.2009

ஏ.கணேசானந்தராஜா
செயலாளர்
ஊர்காவற்றுறை பிரதேச சபை

(C-2514)

## முற்றாக குணமடையாத நோயாளர்களை நலன்புரி நிலையங்களுக்கு அனுப்ப நடவடிக்கை

### மன்னார் மாவட்ட நீதிபதியின் உடனடி செயற்பாட்டால் ரத்து

வன்னியில் இடம்பெற்ற மோதல் காரணமாக காயமடைந்து மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்ட பொது மக்களில் 200 பேர் குணமடைவதற்கு முன் வவுனியா நலன்புரி நிலையத்திற்கு அனுப்பும் நடவடிக்கை கடந்த செவ் வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. இவ்விடயம் தொடர்பாக தெரிய வருவதாவது,

வன்னியில் இடம்பெற்றுவரும் மோதல் காரணமாக சிகிச்சைக்காக ஆயிரக்கணக் கான மக்கள் பலத்த காயங்களுடன் மன்னார் பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைகளுக்காக அழைத்து வரப்பட்டிருக்கின்றனர்.

இவர்களுள் அங்கங்களை இழந்தவர்களும் உள்ளனர். இவர்கள் நன்கு குணமடையும் போது வவுனியா நலன்புரி நிலையங்களுக்கு அனுப்பிவைப்பது வழமை.

இந்த நிலையில் கடந்த செவ் வாய்க்கிழமை நன்கு குணமடைந்த மற்றும் குணமடையாத , நடக்க முடியாத நோயாளர்கள் என சுமார் 200 பேர் வரை குணமடைந்ததாகக் கூறி அங்கு கடமையில் இருந்த வைத்தியர் ஒருவர் இவர்களை வவுனியா நலன்புரி நிலையங்களுக்கு அனுப்ப உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் குணமடையாத நோயாளர்கள் நலன்புரி நிலையங்களுக்கு அனுப்ப இருப்பது தொடர்பாக பொது மக்களினால் மாவட்ட நீதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதனைத்தொடர்ந்து மாவட்ட நீதிபதி ஏயூட்டன் உடனடியாக செயற்பட்டதினைத் தொடர்ந்து நன்கு குணமடைந்தவர்கள் மட்டும் நலன்புரி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஓ-6)

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்**



**அறிவித்தல்**

**திருவிழாக் கால தற்காலிக கடைகள் ஏலம்**

மேற்படி ஆலய வருடாந்த உயர் திருவிழா 23.06.2009 ஆம் திகதி அன்று ஆரம்பமாகி 08.07.2009 ஆம் திகதியன்று நிறைவுபெறும். இக்காலகட்டத்தில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு நிருவாகத்தினால் சுட்டிக்காட்டப்படும் இடங்கள் 07.06.2009 ஆம் திகதியன்று நண்பகல் 12.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

பங்குபற்ற விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது வருகை தந்து நடைபெறும் பகிரங்க ஏலத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

செயலாளர்

(2789)

# இருபது-20 உலக கிண்ணத்தை இந்திய அணி மீண்டும் கைப்பற்றும்

## டெண்டுல்கர் அடித்துக் கூறுகிறார்

(மும்பை)

தோனி தலைமையிலான இந்திய அணி இருபது-20 உலகக் கோப்பையை மீண்டும் கைப்பற்றும் என நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் அடுத்த மாதம் 5ஆம் திகதி 2ஆவது இருபது-20 உலகக் கோப்பைத் தொடர் ஆரம்பமாகிறது.

இதில் ஏ பிரிவில் இந்தியா, பங்களாதேஷ், அயர்லாந்து அணிகள் இடம் பெற்றுள்ளன.

கடந்த முறை கோப்பை வென்ற இந்திய அணி இம்முறையும் சாதிக்கும் வாய்ப்பு உள்ளது.

இது குறித்து இத் தொடரில் பங்கேற்காத இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் கூறியதாவது;

அதிரடி ஆட்டத்துக்கு பெயர் பெற்ற இருபது-20 போட்டிகளில் உலகின் மிகச் சிறந்த அணியாக இந்தியா திகழ்கிறது.

தோனிதலைமையிலான அணி துடுப்பாட்டம், பந்துவீச்சில் சம பலம் பெற்றிருப்பதால் மீண்டும் சம்பியன் ஆவது உறுதி.

நெருக்கடியான சூழ்நிலையை சமாளிக்கும் திறன் நமது அணியிடம் நிறைய உள்ளது.

எனவே இந்தியாவுக்குத்தான் வாய்ப்பு என அடித்துச் சொல்வேன். சமீப காலமாக சேவாக் சிறப்பான ஆட்ட நிலையில்லாமல் தவிக்கிறார்.

கிரிக்கெட் வாழ்க்கையில் ஏற்றம், இறக்கம் சகஜம்தான். இதற்கு சேவாக் விதிவிலக்கல்ல. விரைவில் தனது பழைய அதிரடி ஆட்டத்துக்கு திரும்புவார்.

இங்கிலாந்து சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் 5 வேகப்பந்து வீச்சாளர்கள் இந்திய அணியில் இடம் பெற்றுள்ளனர்.

சகீர்கான், இஷாந்த் சர்மா, ஆர்.பி.சிங் அடங்கிய கூட்டணி நிச்சயமாக கைகொடுக்கும். இவர்கள் பல்வேறு வகையில் பந்துவீசி எதிரணியை நிலைகுலைய செய்துவிடுவர். மீண்டும் சம்பியன் வெல்ல தேவையான அனைத்து திறமைகளும் நமது அணியிடம் உள்ளது. இவ்வாறு சச்சின் கூறினார்.

**'போட்டே கிராபர்களுக்கு நன்றி**

ஸ்டிரிட்ஸ் ஒப் மும்பை என்ற சிறந்த போட்டே கிராபர்களுக்கான விழாவில் பங்கேற்ற சச்சின் கூறுகையில்;

போட்டியில் நிகழும் முக்கிய தருணத்தை படம் பிடிப்பதற்காக சுட்டெரிக்கும் வெயிலில் போட்டே கிராபர்கள் ஒரு நாள் முழுவதும் மைதானத்தில் உட்கார்ந்து இருப்பதை பார்த்திருக்கிறேன்.

இந்த படங்கள் எங்களது கிரிக்



கெட்வாழ்வின் பொன்னானதருணங்களை மீண்டும் அசை போட உதவுகின்றன. இதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓய்வு நேரங்களில் லதா மங்கேஷ்கர், கி-ஷோர் குமார் பாடல்கள் கேட் பேன். மன அழுத்தத்தை இசை நிச்சயமாக போக்கும் என்றார்.

## துளிகள்

**பிளின்டொப் நீக்கம்**


கணுக்கால் காயம் காரணமாக இருபது-20 உலகக் கோப்பைத் தொடருக்கான இங்கிலாந்து அணியிலிருந்து பிளின்டொப் நீக்கப்பட்டார்.

இவருக்கு பதில் அடில் ரசித் சேர்க்கப்பட்டுள்ளார்.

**நடுவர்கள் அறிவிப்பு**

இருபது-20 உலகக் கோப்பைத் தொடருக்கான நடுவர்களாக சைமன் டாபெல், பென்சன் பில்லி பவுடன், ஆலிம் தர், ஸ்டீவ் டேவிஸ், அசோகா டி சில்வா, பில்லி டாக்டரோவ், இயான் குட், டேரைல் ஹார்பர், டோனி ஹில், ரூடி குயர்ட்சன், அசத் ராப் ஆகிய 12 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# ரபெல் நடால் சாதனை



பிரெஞ் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் 2ஆவது சுற்றில் வென்றதன் மூலம் பிரெஞ் ஓபனில் அதிக தொடர் வெற்றிகளை பெற்ற வீரர் என்ற வரலாற்றுச் சாதனையை ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் படைத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடந்த 2 ஆவது சுற்றுப் போட்டியில் ரஷ்யாவின் டி முராஸ் கபாஷ் விலியுடன் மோதிய நடால் முதல் செட்டை 6-1 என்ற புள்ளிக்கணக்கில் எளிதாக கைப்பற்றினார்.

அடுத்த செட் ஆட்டத்தில் டி முராஸ் சற்றே சிறப்பாக விளையாடினாலும் நடால் அதனை 6-4 என்ற புள்ளிக் கணக்கில் வென்றார்.

மூன்றாவது செட் ஆட்டத்திலும் நடாலின் கையே ஓங்கியிருந்தது. முடிவில் 6-2 என்ற புள்ளிக்கணக்கில் அதனை வென்று 3-0 என்ற நேர்செட்களில்நடால்வெற்றிபெற்றார்.

கடந்த 2005ஆம் ஆண்டு முதல் பிரெஞ்ச் ஓபன் தொடரில் பங்கேற்று விளையாடிவரும் ஸ்பெயின் வீரர் நடால் 30 போட்டிகளில் தொடர்ச்சியாக வென்று புதிய வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

கடந்த 1974 முதல் 1981ஆம் ஆண்டுவரை பிரெஞ்ச் ஓபன் மகளிர் ஒற்றையர் ஆட்டத்தில் பங்கேற்ற வீராங்கனை கிரிஸ் இவார்ட் 29 தொடர்வெற்றிகளை பெற்றதே இது வரை சாதனையாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கடந்த புதன் கிழமை போட்டியில் வென்றதன் மூலம் ரபெல் நடால் அச்சாதனையை தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டார்.

# யூ.ஈ.எப்.ஏ. கால்பந்து தொடர் பார்சிலோனா அணி சம்பியன்

(ரோம்)

சம்பியன்ஸ் லீக் கால்பந்து கோப்பையை பார்சிலோனா அணி மூன்றாவது முறையாக கைப்பற்றி சாதித்தது.

பரபரப்பான இறுதிப்போட்டியில் மான்செஸ்டர் யுனைடெட் அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

கிறிஸ்டியானோ ரொனால்டோ, ரூனே உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இருந்தபோதும் மான்செஸ்டர் அணி ஏமாற்றியது.

முன்னணி ஐரோப்பிய கால்பந்து கழக அணிகள் பங்கேற்கும் யூ.ஈ.எப்.ஏ., சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டி இத்தாலி தலைநகர் ரோமில் நடந்தது.

இதில் 2008 ஆம் ஆண்டு சம்பியன் மான்செஸ்டர் யுனைடெட் மற்றும் பார்சிலோனா அணிகள் மோதின.

விறுவிறுப்பான இறுதி ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணி வீரர் சாமுவேல் இடோ முதல் கோலடித்து நம்பிக்கை தந்தார்.

இதன் மூலம் பார்சிலோனா



அணி ஆட்டத்தின் முதல் பாதியில் 1-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் தொடர்ந்து போராடிய மான்செஸ்டர் யுனைடெட் அணி வீரர்களின் கோலடிக்கும் முயற்சி தடுக்கப்பட்டது.

ஆட்டத்தின் 70ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணி வீரர் லியோனல் மெசி ஒரு கோலடித்து வெற்றியை உறுதி செய்தார்.

ஆட்ட நேர முடிவில் பார்சிலோனா அணி 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.


இதன்மூலம் பார்சிலோனா அணி இத்தொடரில் மூன்றாவது முறையாக (1991-92, 2005-06, 2008-09) கோப்பையை கைப்பற்றி அசத்தியது.

ரசிகர்களின் ஆட்டநாயகன் விருதை பார்சிலோனா அணியின் லியோனல் மெசி பெற்றார்.

யு.ஈ. எப்.ஏ., ஆட்டநாயகன் விருதை பார்சிலோனா அணியின் சேவி மற்றும் ஆன்டிரியஸ் இனிஸ்டா பகிர்ந்து கொண்டனர்.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 85





நியூசிலாந்து தொடரில் டெஸ்ட் தொடரை இழந்த இலங்கை அணி ஒரு நாள் தொடரை சமனிலை செய்து நாடு திரும்பியது.

இந்நிலையில் ஏப்ரலில் சார்ஜாவில் நடைபெற்ற சிங்கர்-ஆகாய் கிண்ண முக்கோணத் தொடரில் பங்கேற்க இலங்கை அணி பயணமானது.

**பாலா**

இம் முக்கோணத் தொடரில் சிம்பாவே, பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகள் பங்கேற்றன.

தொடரின் முதலாவது லீக் போட்டியில் இலங்கை-சிம்பாவே அணிகள் மோதின.

*1997ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் திகதி நடைபெற்ற இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.*

*இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களை எடுத்தது.*

*இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 39 ஓட்டங்களைக் கொடுத்து அன்ரி பிளவர் (38), கார்லிஸ் (06) ஆகியோரை ஆட்டம் இழப்பு செய்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றி சாதித்தார்.*

*பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 45.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.*


*இந்நிலையில் தொடரின் இரண்டாவது லீக் போட்டியில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியைச் சந்தித்தது.*

*1997ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.*

*இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 243 ஓட்டங்களை எடுத்தது.*

*(பயணிக்கும்)*

# எண் விளையாட்டு-80



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சம மாகவர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதி தான்.

அக்கட்டங் களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக் கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக் கூடாது.

நேற்றைய முந்தின பகுதிக்கான விடை



## வவுனியா நலன்புரி...

கூடுதலாகச் சென்று வர அனுமதி கிடைத்திருக்கிறது. வாகனங்கள் சென்று வருவதற்கான அனுமதி கூடுதலாக வேண்டும். அப்போதுதான் மக்களிற்கு மனிதாபிமான உதவிகள் கிடைக்க வழி ஏற்படும் என்று நாங்கள் கோரியபோது அதை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும் அதிக அளவில் நாங்கள் அங்கு சென்று வர அனுமதி கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

குடிநீரினை பௌசர் வண்டிகளில் எடுத்துச் சென்று விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. முகாம்களில் நீர்த்தேக்கத் தொட்டிகள் கூட கட்டப்பட்டுள்ளன. ஆனால் முகாம்கள் ஒரு வரண்ட பிரதேசத்தில் இருக்கின்றன. மக்களது அடிப்படைத் தேவைக்கு ஏற்றவாறு நீர் கிடைத்தாலும் அவர்கள் விரும்புகிற அளவிற்கு தாராளமாக கிடைக்கிறதா என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும்.

மோதல்கள் நடைபெற்ற பிரதேசத்தில் மக்கள் எவரும் தற்போது இருப்பதாக நாங்கள் அறிந்திருக்கவில்லை. அங்கிருந்து மக்கள் அனைவரும் வெளியேறிவிட்டதாக அரசாங்கம் எங்களிற்கு உறுதியளித்துள்ளது.

ஓமந்தையிலிருக்கும் சோதனைச் சாவடியில் எமது பணியாளர்கள் சிலர் இருக்க அனுமதியளிக்கப்பட்டது. நாங்கள் முழு அளவில் அங்கிருக்க அனுமதி கிடைக்கவில்லை. ஆனால் சோதனைச் சாவடியில் இருந்து சந்தேகத்தின்பேரில் கொண்டுசெல்லப்பட்டவர்களை பார்வையிடுவதற்கு தற்போதைய நிலையில் எமக்கு அனுமதியளிக்கப்படவில்லை. அந்த அனுமதியை நாங்கள் கோரி வருகின்றோம் என்று அவர் தெரிவித்தார். (ச-14)

## யாழ்.பல்கலைக்கழக கலைப்பீ[டாதிபதி]
## பேராசிரியர் கிருஷ்ணராஜா கால[மானார்]



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா(வயது 62) நேற்று மதியம் கொழும்பில் காலமானார்.

சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த பேராசிரியர் கிருஷ்ணராஜா யாழ்.போதனா வைத்தியசாலையிலும் பின்னர் கொழும்பு அப்பலோ வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

மெய்யியல் துறையில் பேராசிரியரான இவர் தனது கலாநிதிப் பட்டத்தை மொஸ்கோ பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவராக, கலை[...] பேராசிரியர் கிருஷ்ணராஜா சான்றாண்மை மிக்க மாணவர்களை உருவா[...]குரியவர்.

## பிரிட்டிஷ் ரைம்ஸின்...

ஒன்று ஏழாயிரம் பேர் கொல்லப்பட்டதாகக் கூறியது. ஆனால் அந்த எண்ணிக்கையை களத்தில் சரி பார்க்க முடியாததால் அந்த எண் ணிக்கையை ஐ.நாவே கைவிட்டுவிட்டது. இந்நிலையில் ரைம்ஸ் நாளிதழ் மீண்டும் மீண்டும் இந்தப் பிரச்சினையை ஏன் எழுப்புகிறது ரைம்ஸ் நாளிதழ் ஒரு மரியாதைக்குரிய பத்திரிகை. அது போன்ற பத்திரிகை இதுபோன்ற விபரங்களை நம்பியிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

காயமடைந்தவர்களின் எண்ணிக்கை எமக்குத் தெரியும். அவர்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். காயமடைந்தவர்களிற்கு சிறந்த மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த இரண்டு வாரங்களில் காயமடைந்த சுமார் இரண்டாயிரம் பேர் வெளிவந்ததாக மருத்துவமனை தகவல்கள் தெரிவித்தன. காயமடைந்தவர்களின் எண்ணிக்கை எமக்குத் தெரியும். இறந்தவர்களின் எண்ணிக்கை எமக்குத் தெரியாது. நாம் பதிவுகளைச் சரிபார்க்க வேண்டும். துணை அரசாங்க அதிபர்களிடம் பேச வேண்டியிருக்கிறது. அதன் பிறகு நேரடியாகச் சென்று விபரங்களைச் சரி பார்க்கும்போதுதான் இது பற்றி உறுதியாக கூற முடியும். ஆனால் நாங்கள் உறுதியாகக் கூறுகிறோம். இறந்தவர்களின் எண்ணிக்கை ரைம்ஸ் நாளிதழ் கூறும் அளவிற்கு இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-14)

## தயா மாஸ்...

மூன்று மணித்தியாலங்களிற்கு மேலாக சுய விருப்பத்தின் பேரில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் அளித்தார்.

இதன் பின்னர் குற்றப்புலனாய்வுத் துறையின் அறிக்கையின் பேரில் மேலதிக விசாரணைக்கான அனுமதியுடன் பாதுகாப்பு அமைச்சினால் அவருக்கு பிறப்பிக்கப்பட்டுள்ள தடுப்பு உத்தரவின் அடிப்படையில் மீண்டும் குற்றப்புலனாய்வுத் துறையினரால் அவர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் வளர்ச்சிக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஊடகங்களிற்கு தகவல்கள் வழங்கியமை தொடர்பாக விரிவாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத்துறையினரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. (ச-14)

## இடம்பெயர்ந்த...

செய்திருந்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஹெத் சூலர் தலைமையிலான குழுவினர் நேற்று கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் ஊடகவியலாளர்களை சந்தித்தனர். இதன் போது உரையாற்றுகையிலேயே ஹெத் சூலர் இதனை தெரிவித்தார். இடம்பெயர்ந்த மக்களை விரைவாக மீளக்குடியமர்த்தும் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு முன் பல அம்சங்கள் அங்கு நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. அங்கு மக்கள் மீளக்குடியமர்த்தப்படமுன் கண்ணி வெடிகள், மிதி வெடிகள் அகற்றப்பட வேண்டும் என ஹெத் சூலர் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

"இவ் வரலாற்று முக்கியம் வாய்ந்த தருணத்தில், இலங்கையுடன் அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகமும் இணைந்து மோதல்களின் பின்னரான மீள் கட்டுமானம், அபிவிருத்தி பணிகளில் இணைந்து செயற்பட வேண்டும். நான் நினைக்கின்றேன் எனது இவ்விஜயத்தின் மூலம் இலங்கை – அமெரிக்கா இரு நாடுகளிற்கும் இடையேயான உறவுகள் மேலும் மேம்படும்" என இவ்வாறு தெரிவித்தார் ஹெத் சூலர். (ச-5)

## ஜனாதிபதி...

மத்திய அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட பின் எஸ்.எம்.கிருஷ்ணா பெங்களூருக்கு சென்றார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது, அடுத்த வாரம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ டில்லி வருவார் என எதிர்பார்க்கிறோம். இலங்கை சண்டையால் இடம்பெயர்ந்த தமிழர்களின் மறுவாழ்வு குறித்து அவர் பேச்சுவார்த்தை நடத்துவார். தமிழர்கள் வாழும் பகுதியில் சீரமைப்பு பணி செய்வது என்பது மிகப்பெரிய பணி. இது குறித்து அவர் மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவார். இலங்கை சென்ற வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனனிடமும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணனிடமும் தமிழர்களுக்கு சம உரிமை கொடுப்பது குறித்து அவர் உறுதியளித்துள்ளார். அடுத்த வாரம் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரியும் டில்லி பயணம் மேற்கொள்ள இருக்கிறார். இவ்வாறு கிருஷ்ணா கூறினார். இதேவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஹிலாரி கிளின்டனையும் சந்தித்துப் பேசுவார் என செய்திகள் தெரிவித்தன. (ச-5)

## இந்திய அரசாங்கத்து...

கொண்டு வரப்பட்டு அதிகாரப் பகிர்வு தொடர்பான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது. இந்திய நிலைக்கும் ஏற்ப புதிய தீர்வு காணப்படும்.

இலங்கையின் அனைத்து தரப்பினரின் யோசனைகளும், அச்சங்களும் அப்பொழுது கருத்தில் கொள்ளப்படும்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக நாங்கள் நடத்திய போர் எங்களுக்காக மட்டும் அல்ல. இந்தியாவுக்காகவும்தான். 18 ஆண்டுகளுக்கு முன், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொன்றவர்களைப் போரில் சண்டையிட்டு வென்று நீதி வழங்கியிருக்கின்றோம்.

பயங்கரவாதத்துக்கு எதிராக தெற்காசிய நாடுகள் மேற்கொள்ள வேண்டிய போரை நாங்கள் நடத்தி முடித்திருக்கின்றோம். விடுதலைப் புலிகளை நாங்கள் கொன்று விட்டதால் இந்திய அரசு அதற்காகப் போர் நடத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக நாங்கள் நடத்திய போரை ஆதரித்த பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி மற்றும் இந்திய மக்களுக்கு எங்களுடைய நன்றி.

மற்றெல்லாவற்றையும் விட இந்தியா என்ன நினைக்கிறது என்பதற்கே நாங்கள் முக்கியத்துவம் கொடுத்தோம். இந்திய அரசு எங்கள் பக்கம்தான் என்பதால் மகிழ்ச்சியும் நிம்மதியும் அடைந்தோம்.

புலிகளுக்கு எதிராக என்னுடைய வெற்றியும் சோனியா காந்தியின் [...] ஒரே சமயத்தில் வந்திருப்[...]கது. விடுதலைப் புலிகளு[...]டையே குறிப்பாக தமிழர்க[...] இல்லை என்பதையே நடர[...] காட்டியிருக்கின்றது.

விடுதலைப் புலிகளை [...] தோற்று விட்டன. எங்களு[...] களை ஆதரித்த கட்சியும் க[...]ருக்கின்றது. புலிகளை [...] தோற்கடித்து தமிழக மக்கள் [...] விட்டார்கள்.

புலிகளுக்கு எதிரான [...] தமிழ் நாட்டைச் சேர்ந்த ப[...] வர்கள் எங்களைத் தொடர்[...]டினார்கள். அவர்களை யா[...] விரும்பவில்லை என்றார் ரா[...]

## வடக்கு...

இந்நிலையில் நாளை மறு[...] திகதி முதல் ஒரு வருட காலத்திற்[...] பிரதம செயலராக ஆ.சிவ்சுவாமி[...] தாக ஜனாதிபதி செயலகம் நேற்று [...] அனுப்பி வைத்துள்ளது.

இதேவேளை தற்போதுள்ள[...] பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா, [...] வடக்கு மாகாண நிர்வாக சபை [...] மிக்கப்பட்டது முதல் கடமையாற்றி[...] கிழக்கு மாகாண நிர்வாக சபையி[...] ளராக கடமையாற்றியுள்ளார் என்[...]கது.

## இறுதி மூன்று வார...

யுத்தத்தால் நிர்மூலமாக்கப்பட்ட இடம் எனக் கூறப்படும் ஓர் இடத்தினைக் காட்டுகின்ற, விமானத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் ரைம்ஸ் நாளேடு வெளியிட்டுள்ளது. இப்புகைப்படங்கள் ஐ.நாவிலிருந்து பெறப்பட்ட படங்கள் என்றும் அந்த நாளேடு குறிப்பிட்டுள்ளது.

இந்த உயிரிழப்புக்கள் குறித்த தகவல்களையும் அத்தகவல்களுக்கான ஆதாரங்களை பெற்றமை குறித்தும் ரைம்ஸ் நாளிதழின் இராஜாங்க செய்தியாளர் ஹர்த்தரின் பிலிப்ஸ் பி.பி.சிக்கு தகவல் வெளியிட்டுள்ளார். அவரது தகவல் வருமாறு,

ஐ. நா. மன்றம் ஏப்ரல் மாத கடைசி 5 நாட்களில் நடந்த மரணங்களை வைத்து அந்த புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு மே மாதத்தில் எந்தளவிற்கு உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என்பதை கணித்தது. ஆனால் நான் உண்மையில் எனது புள்ளி விபரங்களை ஐ.நா. மன்ற புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கவில்லை.

ஏனெனில் ஐ.நா. மன்ற கணிப்புக்கள் பின்னர் நடைபெறவிருந்த வன்முறை பற்றிய மிகவும் குறைவான கணிப்புக்களாகக் காணப்பட்டன.

மே மாதத்தில் என்ன நடந்தது என்றால், அரசு தரப்பிலிருந்து குண்டுத் தாக்குதல் மிகவும் தீவிரமாக இருந்தது. மே மாதம் 10ஆம் திகதியிலிருந்து 13 ஆம் திகதி வரை நான்கு நாட்களிற்கு எறிகணைத் தாக்குதல் மிகவும் இரத்தக் களரியை உருவாக்கியது.

அதுவரை ஐ.நா.மன்றம் இந்த இறப்பு புள்ளி விபரங்களை தற்காலிக மருத்துவ மனைகளுக்கு கொண்டு வரப்பட்ட உடல்கள் மற்றும் மருத்துவர்கள், மதகுருமார்கள், சமூகத்தலைவர்கள் போன்ற அடையாளம் தெரிந்த நபர்கள் கூறிய தகவல்களை வைத்தே சேகரித்திருந்தது. ஆனால் அவர்கள் பெற்று வந்த உடல்களின் எண்ணிக்கை என்பது மொத்த இழப்புக்களின் ஒரு சிறிய பகுதிதான். உதாரணத்திற்கு ஐந்து பேர் கொல்லப்பட்டிருந்தால் ஒரு உடலைத் தான் அவர்களால் மருத்துவ மனையில் ஒப்படைக்க முடிந்திருக்கும்.

மேலும் இந்த புள்ளி விபரங்களைக் கணிக்கும் முறை என்பது ஐ.நா.கடைப்பிடித்த வழிமுறைதான்; என்னுடையதல்ல. ஒரு நாளைக்கு ஆயிரம் பேர் இறந்திருக்கலாம் என்பது மருத்துவர்கள், மதகுருமார்கள் எல்லாம் ஷெல் தாக்குதலில் இருந்து தப்ப பதுங்கி விட்ட பின்னர் வந்த உடல்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டது.

அப்பொழுது ஒரு நாளைக்கு 250 உடல்கள் வரை வரத் தொடங்கியிருந்தன. முன்பு இருந்ததைப் போலவே, வந்தது ஒரு சடலம் என்றால் அது போல வராமல் மேலும் நான்கு சடலங்கள் இருக்கலாம் என்பதைக் கணக்கில் கொண்டு இந்த கணக்கீடு பெறப்பட்டது.

இது ஒரு கணிப்பீடுதான். ஆனால் இந்தக் கணிப்பீடு ஒரு நல்ல முறையில் கணிக்கப்பட்டது என்று ஐ.நாவே கூறியிருக்கின்றது.

இந்த எண்ணிக்கைகளின் பின்னணியில் உண்மையான தகவல்கள் இருக்கின்றன. குண்டுத் தாக்குதல்கள் தீவிரமடைந்த சமயத்தில் ஐ.நாவால் முன்[...] போல கணக்கீட்டை சரியாக[...]யாத நிலை ஏற்பட்டது.

எனது தகவல்கள் பல்வேறு[...]கள் அளித்த தகவல்களை அ[...] கொண்டது. எந்த அளவிற்கு [...] இந்தச் செய்தியைக் கொண்டு[...] அந்தளவிற்கு செய்ய உறு[...]தேன்.

எந்தவொரு முன் கூட்டிய [...] நோக்கத்துடனும் நான் இந்த [...] செய்ய ஆரம்பிக்கவில்லை. உ[...] என்பதை கண்டு பிடிப்பது [...] நோக்கம். உண்மை மிகவும் [...] இருக்கிறது.

எடுக்கப்பட்ட புகைப்படங்கள்[...] குழிகள் இருப்பதைக் காட்டுகிற[...] உடல்கள் இருக்கின்றன. முகா[...] போர் பலர் என்னிடம் கொடுத்[...]ளில் அந்த கடற்கரைப் புதைகு[...]ல்லப்பட்டோரது உடல்கள் புதை[...]தாக சொன்னார்கள். எனக்கு [...] பாதிரியாரும் அதைப்போலவே [...]குதல்கள் தீவிரமடைந்ததும் [...]களிலே உடல்களை புதைக்க[...] போனதால் பதுங்கு குழிகளி[...]றை புதைத்து மூடியதாகவும் [...]

பக்க சார்பற்ற கண்காணிட்[...] புலன் விசாரணையாளர்களும் [...]ளுக்கு சென்று விசாரணை செ[...]யளித்தால் உண்மையைக் க[...] இதைத் தவிர என்னிடம் ஐ.நா [...]ணங்கள் இருக்கின்றன. இ[...] என்னிடம் தரவில்லை. ஆனால் [...] மன்ற ஆவணங்கள் தான் [...] நிச்சயமாகக் கூறமுடியும். இந்[...]கள் ஏப்ரல் இறுதி வரை எந்த தி[...] இடத்தில் என்ன முறையில் [...]ருக்கிறார்கள் என்பதைக் கா[...] இவை நம்பகமான தரவுகள்.

உண்மை எப்பொழுதாவது [...] என்ற நம்பிக்கை நடக்காத ஒ[...] உண்மையை அறிய உடனடியா[...] பற்றவர்களை அங்கு அனும[...]ணைகளை நடத்த வேண்டும். ஒரேவழி என்று அவர் தெரிவித்த[...] செய்திகள் உள் பக்கத்தில்).


ஜெஸ்வின் அன்ட் பருத்திநகர் கணினிப் பயிற்சியகம்
**JESWIN & POINTCITY COMPUTER INSTITUTE**
2ND CROSS STREET - POINT PEDRO [ T.P.No. 0776648721 ]

2009-ம் ஆண்டின் 3-வது பிரிவு கணினிக் கற்கை நெறிகள் ஆரம்பம்

1ST Batch - 01-06-2009 - 10 மணிக்கு
2ND Batch - 05-06-2009 - 10 மணிக்கு
3RD Batch - 10-06-2009 - 10 மணிக்கு

இணைந்து பயனடையுங்கள்

**Following Course**

- Dip.in.MS OFFICE
- Dip.in.Desktop Publishing
- Video Editting
- Hardware Eng.
- Web Design
- Software Eng.
- Java
- Accounting Package
- Visual Basic
- Internet & E-mail
- GIT,ICT
- C++
- Auto CAD
- Type Setting
- Screen Printing
- Kids Programme
- BCC

- மேற்படி நாட்களில் இணைபவர்களுக்கு விசேட அன்பளிப்புக்கள் அன்றைய தினமே வழங்கப்படும்.
- கிராம சேவகரின் உறுதிப்படுத்தல் OR க.பொ.த. (சா.த), உயர்தரசித்திக்கான சான்றிதழ் கொண்டுவருமிடத்து 60% சலுகைக் கட்டணம் வழங்கப்படும்.
- Practical விரும்பிய நேரம்.

(அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்)

(C-2513)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.05.2009இல் அச்சிட்டு வெளி[...]